விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | மார்கழி 8 | ராபி ஆகி 10 | இதழ் 316
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 23-12-1985

## பிரதமர் ராஜீவுக்கு ஈழ. தே. வி. மு. மகஜர்

[சென்னை]

ஈழத்திற்குக் குறைவான எதையும் தாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஈழ தேசிய விடுதலை முன்னணி இந்திய அரசிடம் சமர்ப்பித்துள்ள மகஜரொன்றில் தெரிவித்துள்ளது.

இந்த மகஜர், தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் சமர்ப்பித்துள்ள மகஜருக்கு முன்னர் சமர்ப்பிக்கப் பட்டதாம்.

ஈழ தேசிய விடுதலை முன்னணியினர் சமர்ப்பித்துள்ள மகஜரில் இனப்பிரச்னை தீர்வுக்காக யாரும் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்கு தாங்கள் தடையாக இருக்கப்போவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கைப் பொறுத்தவரை அது ஒரே பிரதேசமென்றும், அது ஒரேமொழிவாரியான பிரதேசமென்றும் அதனை எவரும் இரண்டாகப் பிரிக்க அனுமதிக்கமாட்டோம் என்றும் அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ● அக்கரைப்பற்றில் மூன்று இடங்களில் நேற்றுமுற்றுகை

# ஆண்கள் அனைவரும் விசாரணைக்கு கூட்டிச்செல்லப்பட்டனர்

### நகை பொருட்கள் அபகரிப்பு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி 155-ம் கட்டையில் வாகனங்களில் சென்ற பச்சைநிற சீருடையணிந்

(9-ம் பக்கம் பார்க்க)

## இரு தியேட்டர்கள் தீக்கிரை!

(அக்கரைப்பற்று)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்றில் சில புகுதிகளை நேற்றுப் பகல் சுற்றிவளைத்து சோதனை மேற்கொண்ட ஆயுதப்படையினர், மூன்று இடங்களில் வயது வித்தியாசமின்றி ஆண்கள் அனைவரையும் விசாரணைக்காக லொறிகளில் கூட்டிச் சென்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற மேற்படி தேடுதல் சம்பவத்தில் வெலிங்டன், சாரதா ஆகிய இரு தியேட்டர்கள் பெரும் சேதத்துக்குள்ளாகி எரிந்த நிலையில் காணப்படுகின்றன.

நேற்றுப் பிற்பகல் தொடக்கம் மாலைவரை பல லொறிகளில் வந்த ஆயுதப்படையினர் இப்பகுதியைச் சுற்றிவளைத்தனர். இத்தேடுதல்

(9-ம் பக்கம் பார்க்க)

## இணைப்பதிகாரியை பிரஜைகள்குழு சந்தித்தது

[கிளிநொச்சி]

கிளிநொச்சியின் புதியஇணைப் பதிகாரியும் இராணுவ உயர் அதிகாரியுமான மேஜர் கொப்பேகடுவாவை கிளிநொச்சி பிரஜைகள் குழுவினரும் அரசாங்க அதிபர் உதவி அரசாங்க அதிபர் முதலானோரும் சந்தித்து பேச்சுவார்த்தை

(9-ம் பக்கம் பார்க்க)

## சுதுமலை தாக்குதல் சம்பவம்: 'லங்கா புவத்' செய்தி

(கொழும்பு)

''யாழ்ப்பாணத்திலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாம் ஒன்று பாதுகாப்புப் படையினரால் நேற்றுமுன் தினம் தாக்கப்பட்டபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்ப்பாணத் தலைவர் கொல்லப்பட்டார்'' என்று 'லங்கா

(9-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் விடுத்த அறிக்கை

[சென்னை]

''சுதுமலையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாமை இராணுவத்தினர் தாக்கிய பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளும், ஏனைய விடுதலை அமைப்புக்களும் இணைந்து இராணுவத்தாக்குதலை முறியடித்ததுடன் இராணுவத்துக்கு பலத்த சேதத்தையும் விளைவித்துள்ளனர்'' என்று சென்னையில் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' நேற்று வெளி

(9-ம் பக்கம் பார்க்க)

# பட்டினிசாவைஎதிர்நோக்கும் திருமலை, மூதூர் (25,000) அகதிகள்!

## பிரதமர் ராஜீவுக்கு உருக்கமான கோரிக்கை

(கொழும்பு)

''திருமலையிலும் மூதூரிலும் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள 25,00 தமிழ் அகதிகள் பட்டினியால் மடிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு வழங்க நல்லெண்ண முயற்சி மேற்கொள்ளுங்கள்''

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு 'ஈழ அகதிகள் புனர்வாழ்வு' அமைப்பு மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளது.

பாதுகாப்புப்படையினரின் தொடர்ச்சியான தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமலை மூதூரிலுள்ள அகதிகளுக்கு அக்டோபர் முதலாம் திகதி முதல் அரச நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதால் அவர்கள் மடிந்துகொண்டிருப்பதாகவும் முகாம்களில் தொற்றுநோய் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பெருந்தொகையான அகதிகளின் வீடுகள் உடைக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினர் கிராமங்களைவிட்டு வெளியேறுமாறு பயமுறுத்தியதைத் தொடர்ந்து பலர் வெளியேறி அகதிமுகாம்களில் தஞ்சமடைந்ததாகவும் மகஜரில் கூறப் பட்டுள்ளது. [க]

## "யாழ்ப்பாணத்தில் உயிர்-உடமை இழப்புகள் அதிகரித்துவருகின்றன!"

[யாழ்ப்பாணம்]

''யாழ்ப்பாணத்தில் துரதிர்ஷ்டவசமாக உயிர் - உடைமை இழப்புக்கள் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளால் அதிகரித்துவருகின்றன. இதனால் யாழ்ப்பாணம் ஏனைய தமிழ்ப் பகுதிகளிலிருந்து வேறுபட்டு ஒரு பெரும் அகதிப் பிரதேசமாக மாறும் நிலை தோன்றியுள்ளது'' என்று யாழ்ப்பாணம் பிரஜைகள் குழு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு அவசரக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

வடபகுதியில் தற்போது நிலவிவரும் பதற்றநிலை, மற்றும் ஆயுதப்படைகளின் நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டுவதாக இந்தக் கடிதம் அமைந்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

''கிழக்கு மாகாணம், வன்

(9-ம் பக்கம் பார்க்க)

# மரத்துடன் பஸ் மோதியது! 19 பேர் காயம்

## ஆஸ்பத்திரியில் அனுமதி

(கா. யோகநாதன்)

''புளிக்குச் சமீபத்தில் நேற்று நண்பகல் வ. பி போ. சபை பஸ் ஒன்று மரம் ஒன்றுடன் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் சிறுகுழந்தை, மூன்று பெண்கள், சாரதி உட்பட பத்தொன்பதுபேர் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களில் இரு பெண்கள் திருமலையிலிருந்து வந்த அகதிகளாவர்.''

வவனியாவிலிருந்து நேற்றுக் காலை புறப்பட்ட இந்த பஸ் வழியில் பழுதடைந்து. திருத்தப்பட்டபின்னர் தொடர்ந்து பயணத்தை மேற்கொண்ட போது புளியிலிருந்து இரு மைல்களுக்கப்பால்இவ்விபத்து நடந்தது.

மரத்தில் மோதியவுடன், மரக்கொப்பொன்று முன் கண்ணாடியை உடைத்து உள் வந்ததினால் பிரயாணிகளுககுக் காயம் ஏற்பட்டதாகக் கூறப் படுகிறது.

காயமடைந்தவர்கள்

(9-ம் பக்கம் பார்க்க)

## மூன்று பகுதிகளில் பூரண ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

சம்மாந்துறை, கல்முனை, நிந்தவூர் ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சம்மாந்துறையிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த வாரம் இடம்பெற்ற 15 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டதை ஆட்சேபித்தே பூரண ஹர்த்தால் அனுஷ்டிக் கப்பட்டது. (மா)

## காயமடைந்த இளைஞர் 3மாதத்தின் பின் மரணம்

[யாழ்ப்பாணம்]

மூன்று மாதங்களுக்கு முன்னர் காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் மரணமானார்.

அம்பனையைச் சேர்ந்த விஜயராசா என்பவர் செப்டம்பர் மாதம் 4-ம்திகதி காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவர் நேற்று மரணமானார். மரண விசாரணைக்கான ஏற்பாட்டை பொலிசார் செய்துள்ளனர்.

# விளம்பரம்

## தேவை

புடவைக் கடைக்கு அனுபவமுள்ள ஆள் தேவை. உடன் நேரில் வரவும். மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம். 2566

உடைகள் எடுக்கவும் கொடுக்கவும் ஒரு ஆள்தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 30-12-85க்கு முன் நேரில் தொடர்புகொள்ளவும். சிறிலங்கா றைக்கிளீனேர்ஸ், கே. கே. எஸ். வீதி, சுன்னுகம். 2562

கிறைண்டர் மில்லில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஆள் தேவை. தொடர்பு கொள்ளவும்: Trufood Grinders, 41, Kanthappasegaram Lane, (ஹரன் சினிமா அருகாமையில்), யாழ்ப்பாணம். [2469]

## வைத்தியம்

மூலவியாதிகள், வாதவியாதிகள், பீனிசம், எக்ஸிமா போன்ற சருமவியாதிகள், தொய்வு, கண்ரோகங்கள், நரம்புத்தளர்ச்சி, மாதவிடாய் கால உபத்திரவங்கள், குழந்தைப்பேறின்மை, குழந்தைகள் சம்பந்தமானவியாதிகளுக்கும், நீரிழிவு ரோகத்திற்கும், சித்த ஆயுர்வேத வைத்திய முறைப்படி சிகிச்சை பெறலாம். டாக்டர் மங்களாம்பிகை D. A. M. மங்களபதி வைத்தியசாலை, [பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, அரசவீதி, நல்லூர். 2530

## WANTED

Retired 35 years experienced Bank Credit Officer seeks suitable position in any leading Establishments in Jaffna - also capable of handling English Correspondence efficiently. Please Contact: Advertisement No: 2564 C/o Eelanadu, Jaffna. 2564

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மின்சாரம், நீர் முதலிய வசதிகளோடு ஐந்து அறைகளுக்குக் குறையாத விசாலமான வீடு வாடகைக்குத் தேவை. விளம்பர இல. 2533 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம். 2533

## விற்பனைக்கு

கிறசர்க் கற்கள், தீராந்தி, பலகை வகைகள் சகாய விலையில் விற்பனைக்குண்டு. சகுந்தலாதேவி மெற்றல் வேக்ஸ், நரும்பசிட்டி, தெல்லிப்பழை [2504]

வீடு கட்டக்கூடிய இரண்டு பரப்புக்காணி பிரயோசனங்களுடன் சித்தங்கேணி சந்திக்கு அருகாமையில் பண்டத்தரிப்பு வீதியில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந. இராஜலிங்கம், கராஜ் ஒழுங்கை, பழைய வீதி, கோப்பாய், 2552

Bairaha Farms புறெயிலர் குஞ்சுகள், Nel Farm சேவற் குஞ்சுகள் 24ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக் கப்படும். பதிவு செய்க, சற்குணராஜா பிறதர்ஸ். பிரம்படி, கொக்குவில். [247?]

## கல்வி

G.C.E.(O/L) இல் கட்டாய பாடமாகிய கணிதம், 17வருட அனுபவமுள்ள ஆசிரியரினுல் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்காக நுணுக்கமான முறையில் குறைந்த காலத்தில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். மற்றும் (O/L), (A/L) சகல பாடங்களும் பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியர்களினுல் வீடுகளிற் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி, or கபிலேஸ் ஜூவெல்லர்ஸ், 280, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2553

## மணப்பந்தல்

லண்டனில் சிவில் எஞ்சினியராகக் கடமையாற்றும் 33 வயதுடைய மணமகனுக்கு 26 வயதுக்குட்பட்ட எக்கவுண்டன் அல்லது I. C. M. A. பட்டதாரியாக உள்ள மணமகள் விரும்பத்தக்கது. இரண்டு வாரத்துக்குள் தொடர்பு கொள்ளவும். மு. க. சின்னையா, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 2532

## மலிவு விற்பனை

விற்று தீர்ப்பதற்காக உள்நாட்டு வெளிநாட்டு ஜவுளி வகைகள் மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. 31-12-85 வரை மட்டுமே,

வனஜா ரெக்ஸ்ரையில்ஸ், 144, மொடேர்ன் மாக்கற், யாழ்ப்பாணம். [2512]




## 1-வது பிறந்ததின வாழ்த்து
### செல்வி தனநாதன் தர்சினி



கூழாவடி ஆனைக்கோட்டை தனநாதன்- மனோரதி தம்பதிகளின் புதல்வி **தர்சினி** தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று 23-12-85 திங்கட்கிழமை கூழாவடியில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள்மார், பாண்டிருப்பில் இருக்கும் பெரியப்பா. பெரியம்மா, அக்கா சுபோஜினி, அண்ணுமார், அண்ணன் முத்துலிங்கம், மச்சாள் சரோஜினி, மருகன் அஜந்தன், மலர்மகள் வீதி, அரியாலை பாட்டி, மாமா, மாமி ஆகியோர் சகல செல்வங்களும் பெற்று நீடுழிகாலம் வாழ வாழ்த்துகிறார்கள். (2565)

## அ. ச. ச. நிலையம்
### பாலர் பாடசாலை ஆசிரியைப் பதவிகள்

**1. பொறுப்பாசிரியை**

தராதரம்: க. பொ. த. (சாதாரணம்) சித்தியுடன் சிறுவர்பாடசாலை போதனு பயிற்சி சான்றிதழ் அல்லது அதையொத்த பயிற்சி நெறி சான்றிதழ்.

சம்பளவிபரம்: ரூபா 400 — 40 X 5 — 600

**2. உதவி ஆசிரியை**

தராதரம்: க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சித்தி.

சம்பளவிபரம்: ரூபா 250 — 25 X 5 — 375

**குறிப்பு:**

- சங்கீத, நடன, ஓவிய, விளையாட்டுத்துறைகளில் தேர்ச்சியுள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 30-12-1985**

தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டிய முகவரி:

செயலாளர்,
**அ. ச. ச. நிலையம்,**
புங்கங்குளம், யாழ்ப்பாணம்.

[2453]

## இரண்டாவது நினைவஞ்சலி
### விக்டர் இராசையா செல்வராஜா

(முன்னைநாள் தேசிய உப்புக் கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர்)



தோற்றம்:
13- 07- 1926

மறைவு:
23- 12- 1983

சீவியத்தில் நேசித்தோம்
மரணத்தில் மறவோம்.
மனைவி, மக்கள், சகோதரிகள்.
மணிகொட், பருத்தித்துறை. (2548)

## 1-ம் வருட நினைவஞ்சலி
### அமரர் திருமதி
### செல்லத்துரை பொன்னம்மா

[யாழ்/ வண்ணுர்பண்ணை]



அன்னைமடியில்:
15- 08- 1904

இறைவனடியில்:
23- 12- 1984

திதி:
11- 01- 1986

எங்கள் குடும்பத்தின் தெய்வத்தாயே! ஒளி விளக்காயும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து எங்களை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே இன்றுடன் ஓராண்டு காலம் பூர்த்தியாகிவிட்டபோதிலும் எங்கள் இதயங்களில் என்றும் அணையாத தீபமாகப் பிரகாசிக்கின்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகன், மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்.

செ. அம்பிகைபாகன்,
திருநெல்வேலி; பணிக்கர்வளவு,
யாழ்ப்பாணம். (2560)

## 3-வது ஆண்டு
## நினைவு தினம்



ஜெனனம்:
09-03-1931

சிவபதம்:
27-12-1982

திதி:
23-12-1985

அமரர்
### திரு. சிவன்முருகன் ஆச்சாரி
அவர்கள்
(முருகன் ஆபரண மஹால், சுன்னுகம்)

ஆண்டுகள் மூன்று ஆயின
ஆனுலும் எம் நெஞ்சம் ஆறவில்லை.

மூன்ருவது திதி நினைவு தினமாகிய இன்று
அன்புடன் நினைவு கூரும்:

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கந்தரோடை வீதி, சுன்னுகம். [2528]

## தென்னுபிரிக்கப் பொலிஸாரினுல்:
# வின்னி மன்டெலா வீட்டிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டார்

(கேப்டவுன்)

தென்னுபிரிக்க தேசியத் தலைவர் நெல்சன் மன்டெலாவின் மனைவி திருமதிவின்னி மன்டெலா அவர் தங்கி இருந்த வீட்டிலிருந்து தென்னுபிரிக்க பொலிசாரினுல் பலாத்காரமான முறையில் வெளியேற்றப்பட்டார்.

தமக்கு பிரிட்டோரியா அரசினுல் விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவையும் மீறி ஜொனெஸ்பேர்க் என்னும் நகரிலுள்ள வீடொன்றில் திருமதி வின்னிமன்டெலா குடியிருந்தாகவும், அதனைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு வெளியேற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

திருமதி வின்னி மன்டெலாவை சூழ்ந்துகொண்ட பொலிசார் துப்பாக்கி முனையில் அவரைக்காரில் ஏற்றினுர்கள். பின்பு அவர் நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு கொண்டுசெல்லப்பட்ட போதும், தடுப்புக் காவலில் வைக்கப்படவில்லை என்று பிரிட்டோரிய பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதன்பின் ஹோட்டலில் இருந்து வெளியேறிய திருமதி மன்டெலா தற்போது பிரிட்டோரியாவுக்கு அருகிலுள்ள நண்பர்களுடன் தங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் தென்னுபிரிக்க இராணுவத்தினர் கவச வாகனங்கள், ஹெலிகொப்டர்கள் சகிதம், சுவாப்போ தீவிரவாதிகளைத் தேடும் வேட்டையில் அங்கோலாவிற்குள் மீண்டும் நுழைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ரா)

### ஆருத்திரா தரிசனம்

[யாழ்ப்பாணம்]

இருபாலை அருள்மிகு கற்பகப்பிள்ளையார் கோவிலில் திருவெம்பாவை 10வது தினமான 27ம் திகதி அதிகாலை அன்னுபிஷேகம் உட்பட விசேட அபிஷேக ஆராதனைகளும் ஆருத்திரா தரிசனக் காட்சியும் திருவீதிவலமும் இடம்பெறவுள்ளன.

## மக்கள் செலவில் மரணச் சடங்கு!

(யாழ்ப்பாணம்)

அரியாலையில்கடந்தவெள்ளிக் கிழமை இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பழனி இந்திரனின் மரணச் சடங்கு கொழும்புத்துறை துண்டி மயானத்தில் நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் இதில் கலந்துகொண்டனர்.

மரணமான இந்திரனின் குடும்ப நிலையை உத்தேசித்து மரணச் சடங்குச் செலவுகளை இப்பகுதி மக்களே பொறுப்பேற்றுச் செய்தனர். அரியாலையில் உள்ள ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய மக்களும், அரியாலை சனசமூக நிலைய மக்களும் நிதிசேகரித்து வழங்கினுர்கள். பதினறு வயதுடைய இந்திரன், பேக்கரி ஒன்றில் வேலை செய்பவராவார். மத்தியானச் சாப்பாட்டிற்காக வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோதே இவர் சுடப்பட்டு மரணமானுர்.



### உலகச் செய்திகள்

### ''இலங்கைப் படைகளுக்கு நிதானம் வேண்டும்'' - ராஜீவ்



[புதுடில்லி]

''இலங்கையில் உள்ள ஆயுதப்படைகள் நிதானத்துடன் செயல்படவேண்டும். இலங்கையில் நிலவும் பதற்றமான சூழ்நிலை கவலை தருவதாக உள்ளது'' என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் பாராளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரின் இறுதிநாள் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே திரு. ராஜீவ் காந்தி இவ்வாறு கவலை தெரிவித்தார்.

''அண்மைக்காலமாக இலங்கை ஆயுதப்படைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனுல்பேச்சுவார்த்தை நடத்த ஏற்படக்கூடிய சூழ்நிலையை இது கெடுத்துவிடாமல் இருக்க ஆயுதப்படையினர் கட்டுப்பாட்டுடன் செயற்படவேண்டும்'' என்றும் திரு. ராஜீவ்காந்தி தெரிவித்தார். (து)

### ஈ.என்.எல்.எவ், புதுடில்லி பயணம்

(புதுடில்லி)

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியின் அழைப்பின் பேரில் ஈழ தேசிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் நேற்றுமுன் தினம் சென்னையில் இருந்து புதுடில்லி புறப்பட்டனர்.

இலங்கை இனப்பிரச்னை தொடர்பான முக்கியமான பேச்சுக்களை நடத்துவதற்காகவே ரொமேஷ் பண்டாரி இம்முன்னணித் தலைவர்களை அழைத்துள்ளதாகத் தெரியவருகிறது. (து)

### கனடா பாகிஸ்தானுக்கு உதவி

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தானுக்கு சுமார் பதினைந்தரைக் கோடி டொலரை கடனுக வழங்க கனடா முன்வந்துள்ளது.

இந்தக்கடனை அளிப்பதற்கு வழிசெய்யும் எட்டு உடன்படிக்கைகள் நேற்றுமுன் தினம் இஸ்லாமாபாத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கைகளில் கையெழுத்திட்ட கனடாவெளியுறவு அமைச்சர் திரு. கிளாக் பாகிஸ்தானின் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு கனடா தொடர்ந்து உதவி அளிக்கும் என்றும் கூறினுர். [ரா]

### இந்தியாவில் எதியோப்பியத் தலைவர்

புதுடில்லி, டிச. 22

எத்தியோப்பிய இராணுவ அரசின் தலைவர் ஹெலிம் மேடியமும் இந்திய வெளியுறவு மந்திரி பி ஆர். பஹத்தும் நேற்று புதுடில்லியில் சந்தித்து நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச்சந்திப்பின் போது இருதரப்பு உறவுகள், சர்வதேச விவகாரங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக கூறப்படுகிறது.

திரு. மேடியம்மைகௌரவிக்கும் முகமாக இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி பகல் விருந்து அளித்தார். இதன்பின் திரு. மேடியம் மகாத்மா காந்தி சமாதிக்குசென்று மலர் மாலைவைத்து அஞ்சலி செலுத்தினுர். (ரா)

## இன்றைய பலன்

மாதம்- மார்கழி

திகதி- 8 (1985-12-23)

கிழமை- திங்கள்

திதி- துவாதசி காலை 7-50ன் மேல் திரயோதசி

நக்ஷத்திரம்- கார்த்திகை முன்இரவு வரை

மேடம்: வணிகர்கள் இன்று அதிகமுதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். வீணன சிந்தனையால் வேதனைப்படுவீர்கள். உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

இடபம்: மனப் போராட்டம் அதிசரிக்கும். உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் ஏற்படும். பிள்ளையொன்றின் உடல் நலமும் பாதிக்கப்படும்.

மிதுனம்: இல்லத்தில் அமைதி நிலவும். பூமியால் லாபமுண்டு. பேச்சு வார்த்தைகள் இன்று நல்ல பயனை அளிக்கும்.

கடகம்: எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும். பின்னணியில் பிளவுக்கும் இடமுண்டு. இன்று பொறுமை நன்று.

சிங்கம்: கல்வித்துறையில் வித்துவத் தன்மை தென்படும். வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர். சுபதினம்.

கன்னி: புதிய முயற்சிகளில் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள் புத்திர வழியால் புதினமும் கிடைக்கும், குடும்பத்திலும் திருப்திகரமான நிலை தென்படும்.

துலாம்: ஆமை வேகத்தில் காரியங்கள் நடைபெறும். பகைவர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும் குடும்பத்திலும் சிறுபிணி வாட்டும்.

விருச்சிகம்: வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு.

தனுசு; சிறுவிடயத்திற்குக் கூட அதிக ஆத்திரம் வரும். பலவழிகளிலும் பணம் செலவாகும் சிலர் அவப் பெயருக்கும் இலக்காகலாம்.

மகரம்; பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர்கள். எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர்கள். மக்களாலும் மகிழ்ச்சியுமுண்டு.

கும்பம்- வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. அன்புக் கரங்கள் அணைக்கும். அதிஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம்.

மீனம்: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதுத் தொழில் துறைகளை மனம் நாடும்: தூர தேச பிரயாணத்திற்கும் வழி கோலப்படலாம்.

திருமலை வே. ரவீந்திரன்

### குண்டுத் தாக்குதல் பாடசாலை சேதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஹெலிகொப்டர் விமானத் தாக்குதலில் இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும் சேதமடைந்துள்ளது.

குண்டுத்தாக்குதலினுல் மேற்படி பாடசாலையில் சுமார் நூறு கூரை ஓடுகள் சேதமடைந்துள்ளன.

### விவசாயிகள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி

(வண்ணுர்பண்ணை)


வவனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாகஇப்பகுதி விவசாயிகள், பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் ஐந்தில் ஒரு வீதமான விவசயே நிலங்காளசெய்கை பண்ணப்பட்டுள்ளதாக தெரிவித்த விவசாயஇலாகா உத்தியோகத்தர் ஒருவர், வவனியா மாவட்டத்தில் வழமையான சாதாரண கால போகச்செய்கை 50,000 ஏக்கராகும், இவ்வருடம் 1985/86 காலப்போகச் செய்கையில் 10,000 ஏக்கர் வரையே செய்கை பண்ணப்பட்டுள்ளன, என்றும் தெரிவித்தார்.

உழுந்து போன்ற சிறுதானியச் செய்கையும் 15,000 ஏக்கரிலிருந்து இம்முறை 5,000 ஏக்கராக குறைந்துள்ளது.

வவனியா பாவற்குளம் பகுதியில் (தமிழ்ப்பகுதி) இம்முறை விவசாயச் செய்கை முற்ருகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## படம் கூறும் கதை




மேலே நீங்கள் காணும் படம் புளக், எமதுநேற்றைய வார மலரின் மூன்றும் பக்கத்தில் வெளிவந்ததாகும். இந்தப்படத்தின் விளக்கம் இதுதான்:

சுவிற்சர்லாந்திலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையில் முதலாம் பக்கத்தில் இப்படம் வெளியாகி யிருந்தது.

சுவிஸில் தங்கியிருக்கும் தமிழர்களை வெளியேறுமாறு அரசு கூறியிருப்பதை படம் சித்தரிக்கிறது. அதாவது; தமிழர்களை நாடு திரும்புமாறுகூறுவது; யேசுநாதர் சிலுவையைச் சுமந்து கொண்டு கல்வாரி மலையில் பயணம் செய்வதை ஒத்ததாகும்என்பதே படத்தின்விளக்கம். (Tamils என்பதற்கு Tamoul (ரமோல்) என்றே சுவிஸில் கூறுவார்கள்)

## மணிவாக்கு

ஒருவீடு தனக்குள்ளேயே விரோதமாக பிளவு பட்டால் அந்த வீடு நிலைத்து நிற்கமுடியாது.

— பைபிள்

# நமது நோக்கு

## தொண்டமான் திட்டமிடும் சமாதான பிரார்த்தனை

“இந்த உலகம் காணும் கனவுகளைப் பார்க்கிலும் அதிகமான காரியங்களை பிரார்த்தனையால் சாதிக்க முடியும்’’ என்று ஆங்கிலப் பெரும் புலவர் பிரபு அல்பிரெட் ரெனிசன் கூறியிருக்கிறார்.

சமய வாழ்க்கையைப் பற்றி அதிகம் பேசப்படும் சீசன் இது. நத்தாரும், திருவெம்பாவையும்,விசேடமாயாவும் அறநெறிபற்றி அதிகம் பேச எழுத பிரசங்கிக்க, கொண்டாட்டம் நிகழ்த்த இடமளிக்கும் பண்டிகைகள்.

இது ஒருபுறம்; இன்னொருபுறம் சமயப் பெருமையைப் பரப்புமாறு அற்புதங்களை விளக்கும் பேச்சே பெருகி, சமய உண்மையைத் தெளிவிக்குமாறு அறநெறியை விளக்கும் தொண்டு குறைந்திருக்கிறது.

இதனால்தான் அற்புதங்களே சமயம் என்று தவறாக உணர்ந்த இளைஞரின் நெஞ்சம் அவற்றை விட்டு அப்பால் நழுவி வருகின்றது.

பிரார்த்தனையெனும் போது சமயத்தில் நம்பிக்கை கொள்ளாத இளைஞர் குழாம் ஒரு பாலைவனத்தை நினைப்பது இயற்கை, அற்புதங்களைச் செய்தல் ஆற்றலை விழலுக்கு இறைப்பதே என்று இராமகிருஷ்ணர் கூறியுள்ளார். நீர்மேல் நடக்கும் வன்மையை ஒருவர் பெற்றிருப்பதாகப் பேசக்கேட்ட இராமகிருஷ்ணர் சிரித்து, ‘‘ஓடக்காரனுக்குக் கூலி கொடுத்து ஆற்றைக் கடந்து போகலாமே. அதைவிட்டு இந்தக் கலையைக் கற்பதில் ஏன் காலம் கழித்தாரோ’’ என்றாராம்.

உலகத் தொண்டையும் தனி வாழ்க்கையையும் பிரிக்க முடியாதபடி இணைத்துக் கொண்ட வாழ்க்கையே உண்மையான சமய வாழ்க்கை.

உலகத்தை விட்டு ஒதுங்க வேண்டுமென்று இந்நாட்டில் காணப்படும் நாற்பெருஞ் சமயங்கள் எதுவும் கூறவில்லை.

உலகில் நடைபெறும் பெரும் வாழ்க்கைப் போராட்டத்தில் உண்மை என்னும் கடவுளை வழிபட்டு ஏனையோருக்கு இன்னா செய்யாமல் வாழ்தலையே மக்கள் அனுட்டிக்கும் சமயநெறி எதுவும் உறுதிப்படுத்துகிறது.

இந்த வகையில் உழைத்து, உழைப்பே தெய்வம், உழைப்பே உண்மை என்ற அடிப்படையில் தமது வாழ்க்கைப் போராட்டத்தை நடத்திவரும் மலையகத் தொழிலாளர் ஒரு தனித்துவ சமூகம்.

இலட்சக் கணக்கானோர் இந்த நாட்டின் நலனுக்கு உழைத்து தக்க ஊதியம், வாழ்க்கைக்கு இன்றியமையாத அரசியல் சமுதாய உரிமைகள் இன்றி இந்த நாட்டைவிட வேறு நாடு எதனையும் கண்ணாலே காணாது இங்கே சமாதியடைகின்றனர்.

இது சமயத்துக்கும், சமூகத்துக்கும் முரண்பாடான செயல்; அநீதியின் அடிமட்டம்.

இன்றைய சமுதாய சாத்திர முறைப்படி தொழிலாளர் சங்கம் அமைத்து, அந்த அடிப்படையில் தங்களுக்கு உரித்தான வாழ்க்கை வசதிகள் எவ்வித பாகுபாடுமின்றி வழங்கப்பட வேண்டுமென்று நீண்டகாலம் போராடி வெற்றிபெறாது விரக்தியடைந்திருக்கின்றனர்.

அவர்களின் பெருந் தலைவர் சிரேஷ்ட அமைச்சர் தொண்டமான் ஆட்சியில் செல்வாக்குடைய வரேனும் தமது தொழிலாளர் குழாமுக்கு விடிவு காண்பதில் பெருஞ்சிரமப்படுகிறார்.

மலையகத் தமிழரின் உரிமைகளை மறுக்க வேண்டுமானால், இலங்கைத் தமிழரின் போராட்டத்தை குறுக்கே விட்டு இந்த ஏழைத் தொழிலாளருக்கு இடர்விளைவிப்பதே அரசின் கொள்கைபோல் தெரிகிறது.

நான்கு இலட்சம் மலையக மக்களுக்கு அடுத்த வருடம் பிரஜாஉரிமை வழங்கப்படவிருக்கிறதென்று சுதந்திரக்கட்சிபேச்சாளர் அத்தனகலை எம்.பி. திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் ஒரு ‘குண்டு’ போட்டிருக்கிறார்.

இந்த நாட்டுக்கு விமோசனம் ஏற்படவேண்டுமாயின் இந்த மனிதாபிமான பிரச்னைகளைக் கொண்டு அரசியல் சொக்கட்டான் போடுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

தமிழ் இளைஞர்களின் துப்பாக்கிக்கும் குண்டுகளுக்கும் அஞ்சப்போவதில்லையென்று திட்டவட்டமாகக் கூறும் ஜனாதிபதி மலையக மக்களின் ஒரு மனப்பட்ட பிரார்த்தனைக்கு மனம் நெகிழ்ந்து ஆவன செய்வாரென்று எதிர்பார்க்கலாம்.

இலங்கைத் தமிழர்வேறு, இந்திய வம்சாவளியினர் வேறென்று நாம் நடந்து கொண்ட குற்றத்தைஒப்புக்கொண்டு இலங்கைவாழ் தமிழ்மக்கள் ஒரே சமூகத்தினரென்ற உண்மைக்கு உரைகல்லாக எம்மைமாற்றிக் கொண்டால் வெற்றி தானாகவே வரும்.

## கருத்தரங்கு

[மாவிட்டபுரம்]

மாவிட்டபுரம் லயன்ஸ் கழக ஆதரவில் இம்மாதம் 26-ந் திகதி வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

வைத்திய நிபுணர்களின் கருத்துரையும் இந்நோய் பற்றிய படமும் காண்பிக்கப் படவுள்ளது.

★ தெற்காசிய அரங்கு — அரசியல் அவதானி

# நத்தாரில் தேசிய மொழிக்கு ஏற்பட்ட அகால மறைவு!

## ‘சிஎன்ஏபிரி’யின் கிறிஸ்மஸ் கார்ட்டில் தமிழ் வாபஸ்

### கொழும்பு

தலைநகரில் அகில இலங்கை பொதுநலசங்கம் ஒன்று பிரசுரித்துள்ள கிறிஸ்மஸ் கார்ட்டில் தமிழைக் காணவில்லை. இலங்கைப்படம் வரையப்பட்டுள்ள இந்தக் கார்ட்டில், ஆரோக்கியம் பற்றிய செய்தி சிங்களத்திலும் இன்னும் நான்கு ஐரோப்பிய மொழிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய கயரோக தடுப்புச் சங்கம் (CNAPT) என்றால் யாழ்ப்பாணம் நன்கறிந்த சங்கம். அதற்கு உழைத்தவர்கள், உழைக்கின்றவர்கள் இங்கு பல்லாயிரம்; நோயைத்தடுக்க தமிழ் உதவாது என்ற காரணமோ?

இதனை நன்கு விமர்சித்த கொழும்பு டாக்டர் பி. ராம் அலுவிகாரை சொல்வது; கயரோகத்தில் சுவாசப்பை சத்திரசிகிச்சையை மிகத் திறம்பட நடத்திய இலங்கையின் முதலாவது ‘தொருசிக்’(Thora-cic) நிபுணர், தமிழ்ப்பெரியார் டாக்டர் ஏ.ரி.எஸ். போல். இது அவருக்கொரு தனிப்பட்ட அவமானம். இத்தகைய பெருமனம் படைத்த சிங்களச் சான்றோர் வாக்கு பொதுசன அபிப்பிராயத்தில் வலுப்பெறாததே இந்த நாட்டுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் சாபக்கேடு!

வைத்திய வள்ளல்கள் தமிழருக்குள்ளே குறிப்பாக கயரோக சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்றோர் இன்னும் பலர். டாக்டர் வில்சன் ஜெயரத்தினம், டாக்டர் வன்னித்தம்பி போன்றவர்கள் எவ்விதபாகுபாடுமின்றி தன்னலமற்ற சேவையாற்றினர். ஆனால் 45 வருட நிபுணத்துவ சேவையில் சர்வதேசப் புகழ்பெற்ற டாக்டர் ஏ.ரி.எஸ் போலின் பெயர் குறிபிடப்பட்டிருக்கிறது.அவர் தேசபற்றுடையவர் என்பது அண்மையில்; கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இடம்பெற்றுள்ள இதயசிகிச்சைப்பிரிவில் எழுந்த சர்ச்சை பற்றி அவர் வெளியிட்டுள்ள கண்டனம், மிகத்தெளிவானதும் நியாயமானதுமே.

இரண்டு நிபுணர்கள் ஒருவருகொருவர் மோதிக்கொள்வதால் இதய நோயாளிகள் பலியாவதும், மருத்துவ சேவைக்கு இழுக்கு ஏற்படுவதும், சுகாதார அமைச்சின் நியாயமற்ற தலையீடே காரணமென்று கூறியிருக்கின்றார்.

‘‘ஆண்டவனுடைய ஆட்சியையும் அறத்தையும் நாடுங்கள்; மற்றவை தாமாக வந்து சேரும்’’ என்ற கிறிஸ்துவின் மணிமொழியை இன்று நாம் நினைவுகூர வேண்டும். போலித்தன்மையும் வஞ்சனையும் இக்காலத்தில் நாடுகளிலும் நாடுகளுக்கிடையேயும் மேலோங்கியுள்ளன.

### ஒற்றையாட்சி

ஒற்றையாட்சி முறையை அசைக்கமுடியாதென்று நாம் இழுத்துக்கட்டிய கொடுக்கு அவிழ்ந்து போகும்தறுவாயில்; தமிழ் தேசியமொழி, ஐ.தே கட்சியின் சாதனையென்றும் தமிழர்களுக்கு என்ன குறை? அடிப்படை உரிமை மீறல் தமிழர்களை இலகுவில் பாதியாது; தேசத்தின் பிரதம நீதியரசர், சட்டமா அதிபர், இன்று இளைப்பாறிய பொலிஸ்மா அதிபர் மூவரும் தமிழரே! என்று ஜனாதிபதி சொல்லியிருக்கிறார்.

இந்தக் கொண்டாட்ட காலத்தில் இவ்வித கிண்டல் தமிழர்களுக்கு எவ்வாறு உதவலாம்? பாரில் சமாதானமும், நன்மக்கள் மத்தியில் நல்லுறவும் என்பதே நத்தார் சித்தாந்தம். இது கிறிஸ்தவ நாடு அல்ல; இருப்பினும் யேசுவும் புத்தரும், நபியும், அப்பரும், மணிவாசகரும் போன்ற அறவிளக்குகள் உலகத்தில் ஓயாமல் ஒளிபரப்பிக் கொண்டே இருக்க, பௌத்த கலாசாரத்துக்குப்புகலிடமான இலங்கையில் சகோதரர்கள் ஒருவரை ஒருவர் கொல்லும் கோரக் காட்சி முடிவடைய வழி உண்டா?

### சார்க் [SAARC]

நாட்டுக்குள் நடப்பதைப் பார்த்து ஏமாற்றம் கொண்டால் நாடுகளுக்கிடையே உறவை உருவாக்கும் முயற்சி நேர்மையுடையதா? என்று ஆராயப்படவேண்டும்.

அறமே வாழ்க்கைக்குத் துணை என்பது தனிப்பட்டவர் வாழ்வில்தான் உண்மையென்று கொள்வதா? உள்ளும்புறமும் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்பது நாட்டின் ஆட்சிக்கு அடிப்படைக் கோட்பாடு. அதுபோன்று ஒரு பிரதேசத்தில் இயற்கையாக அயல்நாடுகளென்று அமைந்த நாடுகள் பிணக்கையும் போரையும் எல்லையாகக் கொண்டு வாழ்வது மடமை. இந்த உணர்வே தெற்காசிய நாடுகள் ஏழு-சார்க் என்ற உறவு நிறுவனத்தை அமைக்க உதவியது.

நம்பிக்கை ஒளியுடன் ஆரம்பமான இந்நிறுவனத்தின் இரு பெருந் தலைவர்கள்; பாகிஸ்தானின் ஸியாவும், இலங்கையின் ஜேஆரும். இவ்விருவரும் இந்தியா ‘பெரியண்ணன்’ என்ற பட்டத்தைச் சூட்டி, தங்கள் இருநாடுகளுக்குத் தொல்லை கொடுக்கப்படாதென்ற கருத்தைச் சொல்லாமல் சொல்லியிருக்கின்றனர்.

இலங்கை வந்த ஸியா, ஜேஆரைக் கட்டித் தழுவி அந்நியோன்யம் பாராட்டியதோடு, இலங்கைக்கு நெருக்கடி எனின் பாகிஸ்தான் உதவிக்கு விரையுமென்ற ஆசை வார்த்தையும் பேசியிருக்கிறார்.

பாகிஸ்தானில் நடைபெறும் ஆட்சி இராணுவ ஆட்சியென்பது பேரில் மட்டுமே. மாஷல்-லோ ஆட்சி என்ற சொல்லடுக்கில் மக்கள் அஞ்சிவிடக்கூடாது என்கிறார் ஸியா.

இந்தவகையில், இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் உண்டான நட்பு எதிர்மறை உறவென்று கொள்ளலாம். இலங்கையில் ஜனநாயகம் என்பதே பேச்சு, நடப்பதெல்லாம் சர்வாதிகாரப் போக்கு. பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் உண்டென்றால், அவசர கால ஆட்சிமுறை அதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது.

எனவே பாகிஸ்தானும் இலங்கையும் அண்ணனும் தம்பியுமென்ற உறவு, உறுதியான கொள்கையின் அடிப்படையில் எழுந்தது அல்ல என்பது தெளிவாகும்.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ஜேஆர் காஷ்மீர் பிரச்னை பற்றி ஸியாவுடன் பிரஸ்தாபித்தார். இலங்கைக்கு வந்த ஸியா இன்றைய ஆட்சிக்கு ஆபத்தென்றால் குரலெழுப்பட்டும் என்றார். இந்த ஒற்றுமை ஆழமற்ற, இந்தியாவுக்கு முரண்பட்ட இருநாடுகள் கொண்ட உறவு என்பதை; பிரதமர் ராஜீவுக்கு இவ்விருவரும் வழங்கிய ஆசியுரைகளில் காணலாம்.

அன்னையரைப் போல் அல்லாது மகன் ராஜீவ் சமாதானப்போக்குடைய பெருந் தலைவர் என்று வர்ணித்த இலங்கை ஜனாதிபதி ராஜீவை ‘சார்க்’ நிறுவனத்துக்கு தலைமைதாங்க அழைத்தார். பாலன் என்று நினைத்திருக்கக் கூடும் ‘‘அந்த ஒரு பணியைத் தானே நான் தவிர்க்க முயல்கின்றேன்’’ என்றார் ராஜீவ் ‘ஆழமற்ற ராஜதந்திரம், தமக்கந்தரம்.’

### அளவு கடந்த பணிவா?

பரந்த தேசமாகிய இந்தியாவில் மாநிலங்கள் பல போர்க்கொடி உயர்த்தியபோதும், குறிப்பாக, தெற்கில் கர்நாடகமும் ஆந்திராவும், வடக்கில் பஞ்சாப், குஜராத் அஸாம், ஜமும் காஷ்மீரும் பெருஞ் சவாலை எழுப்பின.

ஒவ்வொன்றையும் அந்த மாநில மக்களின் மனப்போக்கை அறிந்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் உடன்படிக்கை ஏற்படுத்தி பஞ்சாப், அஸாம் மாநிலங்களில் தேர்தல் நடத்தியும் குஜராத்திலும் ஜம்மு-காஷ்மீரில் வேண்டிய வாக்குறுதிகள், நிர்வாகமாற்றங்கள் செய்தும், தெற்கில் ராஜதந்திரமுறையில் நிலைமையைச் சுமுகமாக்கியும் தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு உறுதி அளித்துவருகிறார்.

பஞ்சாப் உடன்படிக்கைக்கு எதிராக பெரிய ஆர்ப்பாட்டம் தொடங்கியிருக்கிறது. அதேபோல் அஸாமிலும் தீவிரவாதிகள் குழப்பம் செய்யலாம்; அவற்றிற்கு அஞ்சாது, சீக்கிய தீவிரவாதிகள் இன்றும் ராஜீவின் தலையைக் கொய்ய முயலும் போதும், அஞ்சா நெஞ்சுடன் நாட்டுக்கு உரித்தான உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளிலிருந்து இம்மியும் அசையாது, இவற்றை முறியடிக்கும் நம்பிக்கையுடன் ஆட்சி செலுத்துகிறார் ராஜீவ்.

எனவே ‘சார்க்’ அங்குரார்ப்பணத்திலேயே கண்கட்டி வித்தையில் ஈடுபட்டிருக்கும் நட்புநாடுகளின் கரவை முளையிற் கிள்ளிவிட வேண்டும். இதற்கு ராஜீவ் காட்டிவரும் அளவு கடந்த பணிவு தடையாக இருக்கலாம்.

### பாகிஸ்தானும் இலங்கையும்

பகிரங்கமாக வெளிப்படுத்தும் நட்பு, தத்தம் நாடுகளில் எழுந்திருக்கும் தேசிய பிரச்னைகளுக்கு சாதகமற்றது. அத்துடன் அயல்நாடாகிய இந்தியாவில் பெரும்சந்தேகத்தை உண்டாக்கும் போக்குடையது.

முதலில் கோணுவது முற்றும் கோணும் என்ற பழமொழிக்கு ‘சார்க்’ ஒரு உதாரணமாவதை அனுமதிக்கமுடியாது.

(11-ம் பக்கம் பார்க்க)

# என் பெயர் ராணி

## சின்ன வயதில் ஏற்படும் ஆறு பொல்லாத நோய்களிலிருந்து என் அம்மா என்னைக் காப்பாற்றிவிட்டாள்!



### அந்த நோய்கள் ஏற்பட்டால் எமது வளர்ச்சி பாதிக்கப்படுமாம்

### போஷாக்கின்மை ஏற்படுமாம்

### அங்கவீனம் கூட ஏற்படலாமாம்

### ஏன், சில சமயம் இறந்து போகக்கூட நேருமாம்!

### எவ்வளவு அபாயம் பார்த்தீர்களா?

### உங்கள் அம்மாவும் உங்களை இவ்வாறு காப்பாற்றியுள்ளாவா?

ஆறு சிறுவர் நோய்களும் அவற்றுக்கெதிரான தடுப்பு மருந்தேற்றல் அட்டவணையும்

| எப்பொழுது? | என்ன? | ஏன்? |
|---|---|---|
| குழந்தைகளுக்கு<br>பிறந்ததும் | பி. சி. ஜி. ஊசி மருந்து | காச நோயிலிருந்து பாதுகாக்க |
| 3 ஆம் மாதம் | முக்கூட்டு (டி. பி. ரி) ஊசி மருந்து (1)<br>போலியோ மருந்து (1) | தொண்டைக் கரப்பான், குக்கல், ஏற்புவலியிலிருந்து பாதுகாக்க,<br>இளம்பிள்ளை வாதத்திலிருந்து பாதுகாக்க. |
| 5 ஆம் மாதம் | முக்கூட்டு ஊசி மருந்து (2)<br>போலியோ மருந்து (2) | ,,<br>,, |
| 7 ஆம் மாதம் | முக்கூட்டு ஊசி மருந்து (3)<br>போலியோ மருந்து (3) | ,,<br>,, |
| 9 ஆம் மாதம் | சின்னமுத்து ஊசி மருந்து | சின்னமுத்திலிருந்து பாதுகாக்க |
| 18 ஆம் மாதம் | முக்கூட்டு ஊசி மருந்து (4)<br>போலியோ மருந்து (4) | தொண்டைக் கரப்பான், குக்கல், ஏற்புவலியிலிருந்து பாதுகாக்க<br>இளம்பிள்ளை வாதத்திலிருந்து பாதுகாக்க |
| கர்ப்பிணித் தாய்மாருக்கு: | | |
| கர்ப்பம் தரித்து 12 வாரத்தின் பின்னர் | ஏற்புவலி மருந்து (1) | பிறக்கும் குழந்தையையும் தாயையும் ஏற்புவலியிலிருந்து பாதுகாக்க. |
| முதல் மருந்து ஏற்றி 6 வாரத்தின் பின்னர் | ஏற்புவலி மருந்து (2) | |

கவனிக்க: இந்நோய்களுக்கு திரான முழுமையான தடுப்புச் சக்தியைப் பெற, இம் மருந்துகளை அட்டவணையிற் குறிப்பிட்டபடி, உரிய காலத்தில் இடை நிறுத்தாது தொடர்ந்து கொடுத்தல் அவசியம்

### உங்கள் பிள்ளைக்கும் தடுப்பு மருந்தை இன்றே கொடுங்கள்

### தாமதம் செய்தால் தவிக்க நேரிடலாம்

இலங்கை சிறுவர் பணியகம்
சுகாதாரக் கல்விப் பணியகம்
யுனிசெப் நிறுவனம்

## துரித தடுப்பு மருந்தேற்றும் தேசிய இயக்கம்

Grant K & E 6194



(யாழ்ப்பாணம்)

புதிய சோனக தெரு (பொம்மை வெளி) ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) சிறுவர் பாடசாலை ஆதரவில் பாடசாலை முன்றலில் நடைபெற்ற மரம்நாட்டு விழாவில் மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா அவர்களும், ஜனுப் அப்துல் ரஸரக் மௌலவி (ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியர், அல் ஆலிம்) அவர்களும், ஜனுப் எம். அப்துல் அஸீஸ் (ஹஜ்ரத் அபூபக்கர் ரலி பள்ளிவாசல்) அவர்களும் கலந்து கொண்டனர்.

மில்க்வைற் தொழிலதிபர் பொம்மை வெளி பொதுமக்களுக்கு வீட்டுத்தோட்டத்துக்குரிய விதைகளும், மரக்கன்றுகளும் இலவசமாக அன்பளிப்புச் செய்தார். சிறுவர்களுக்கு அறிவு நூல்களும் மற்றும் பொன்மொழி பிரசுரங்களும் அன்பளிப்புச்செய்யப்பட்டன.

## மின்சார கண்காணிப்பு சபை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பகுதியிலும் மின்சார கண்காணிப்பு சபையொன்றை அமைப்பதற்கான ஒழுங்குகளை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ் ரி. கதிரவேலுப்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

இச் சபையின் அங்குராப் பணக்கூட்டம் இம்மாதம் 22ம் திகதி முற்பகல் பண்டத்தரிப்பு பட்டின பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறும். (க)

## 'தமிழர்கள் எல்லோரும் ஒரே தட்டு மக்களல்ல'

### கருத்தரங்கில் டானியல்

[யாழ்ப்பாணம்]

''தமிழர்கள் என்ருல் எல்லோரும் ஒரே தட்டு மக்கள் அல்ல. இங்கு இரண்டுவிதமான தமிழர்கள் வாழ்கிருர்கள். இவர்களில் சிறுபகுதியினர் வீடு, வாசல், தோட்டம், துரவு, பெரும் உத்தியோகம், தொழிற்சாலைகள், கடைகள், பங்களா, கார், பெருந்தொகைப் பணம் போன்ற சகல சௌபாக்கியங்களுடனும்வாழ்கின்றனர். பெரும்பகுதியினர் இருப்பதற்குசொந்த வீடின்றி, வயிற்றுக்கு போதிய உணவின்றி, போதிய சுகாதார வசதியின்றி, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற நிலையில் வாழ்கிருர்கள்'' என்று சென்ற புதன் கிழமை நெல்லியடி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற ''சகல ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான போராட்டமே தமிழர்களின் விடுதலைக்கான மார்க்கமாகும்'' என்ற தலையங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு. கே. டானியல் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்: நாம் தமிழ் முதலாளித்துவ தலைவர்களை நம்பி சமீப காலம்வரை ஏமாந்து விட்டோம். இன்று தமிழ்இளைஞர்கள் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் தலைமையை எடுத்துள்ளார்கள். அவர்கள் தமக்கிடையே பிளவு பட்டு அடிபடுவதை உடன் நிறுத்தவேண்டும்.

பொது எதிரிக்கு எதிராக பொதுக்கொள்கையின் கீழ் ஐக்கியப்படவேண்டும். போராட்டத்தை நிறுத்துவதோ, கைவிடுவதோ கூடாது. அது தமிழ் மக்களுக்கு பாதகமானது. எனவே தமிழ் மக்களுக்கும் ஏனைய அடக்கியொடுக்கப்பட்ட மக்களுக்கும் வெற்றி கிட்டும்வரை தொடர்ந்து போராடவேண்டும் என்ருர்.

இக்கருத்தரங்கு திரு. கே. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

## திருடினுர்கள்


(கண்டி)

இரு வெளிநாட்டு மாணவர்கள் இலங்கையின் தேசியக் கொடியைத் திருடியது சம்பந்தமாக கைது செய்யப்பட்டனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு மாணவியும் அயர்லாந்து மாணவர் ஒருவருமே கைது செய்யபட்டவர்கள். இதுபற்றி கூறப்படுவதாவது.

பாகிஸ்தான் ஜனுதிபதியின் கண்டி விஜயத்தின் போது தலதா மாளிகை அருகில் நாட்டப்பட்டிருந்த ஆறு கொடிகளை இவர்களிருவரும் தமது இலங்கை விஜயத்தின் ஞாபகார்த்தமாக எடுத்து வைத்துள்ளனர்.

இவர்களிருவரும் தெரியாமல் செய்த இக் குற்றத்திற்காக எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



(புலோலி)

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத் தலைவராக லயன். திருநாவுக்கரசு கமலநாதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் சங்க இயக்குநர் சபை உறுப்பினராகவும், ஆவரங்கால் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளராகவும், ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினராகவும், ஆவரங்கால் மத்தி இளைஞர் விவசாயக்கழகத் தலைவராகவும், புத்தூர் மேற்கு வீடமைப்புக்குழு உறுப்பினராகவும் சிறப்பாக செயற்பட்டு வரும் இவர் முன்னுள் கிராமோதய சபைத்தலைவராகவும், ஆவரங்கால் மத்திய சனசமூக நிலையச் செயலாளராகவும் சேவை யாற்றியவர்.

சமய, சமூக சேவைகளில் முன்னின்று உழைத்து வரும் லயன். கமலநாதன் அச்சுவேலி லயன்ஸ் கழகத்தின் முக்கிய உறுப்பினராகவும் செயற்பட்டு வரும் இவர் கடந்த மூன்று வருடங்களாக அச்சுவேலி ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைத்தலைவராக கடமையாற்றி வருகிருர்.

## 'பெற்ருேர் - ஆசிரியர் தொடர்பு அவசியம்'

[யாழ்ப்பாணம்]

''பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்த்துவிட்டால் தங்களது கடமை இத்துடன் முடிந்துவிட்டதென எண்ணிவிடக் கூடாது. பள்ளியில் இருந்து மாணவர்கள் வீடு வந்ததும் அவர்களுடைய அப்பியாசக் கொப்பிகளை வேண்டிப் பார்த்து ஊக்கப்படுத்த வேண்டும். இச்செய்கையால் தங்களை அறியாமலே பிள்ளைகளுக்கும் படிப்பில் கவனம் ஏற்படும். அத்துடன் ஆசிரியர்களோடும் தொடர்பு கொண்டுவந்தால் பிள்ளைகளுக்குப் பயன் அளிக்கும்' என வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் திரு. செ. வரதலிங்கம் முதலாம் வகுப்புக்கான மாணவர்களைப் புதிதாகச் சேர்க்கும் வைபவத்தில் உரையாற்றினுர்.

பாடசாலை அபிவிருத்திச் சபையின் அயரா முயற்சியாலும் பெற்ருேர்களாகிய உங்களது ஒத்துழைப்பாலும் சுற்றுமதிலும், மலசலகூடங்களும் அழகுற அமைக்க முடிந்தன. இப்போது மாணவர்களின் வரவு அதிகரிப்பதால் நாம் மேற்கொண்டும் கட்டடங்கள் அமைத்து வகுப்பறைகளை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்ருேம். இதனையும் விரைவில் செய்து முடிக்கலாமென இப்பாடசாலை அபிவிருத்திச்சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது என்று மேலும் தெரிவித்தார்.


## கனி மரங்கள் விநியோகம்

[சுண்டுக்குளி]

நவாலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் நவாலி முருகானந்தா சனசமூகநிலைய முன்றலில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. டபிள்யு. என். தேவகடாட்சம் தலைமையில் கனி கொடுக்கும் மரங்கள் அங்கத்தவர்களுக்கு அதிர்ஷ்டம்மூலம் வழங்கப்பட்டது.

இவ்வைபவத்திற்கு வடமாநில இளைப்பாறிய விவசாய உதவிப் பணிப்பாளரும் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் தற்போதைய அதிபருமான திரு. செ. ஜெபரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இதில் மா, பலா, கொய்யா போன்ற மரங்களே அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டன.

## நெஞ்சில் நிறைந்தவர்



இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் அமரர் தம்பு மாசிலாமணி மறைந்துவிட்ட போதிலும் அவரின் சேவையை மறக்கமுடியாது. பொலிஸ் நிலையத்துக்கு, அலுவல்காரணமாக மக்கள் போகவேண்டி ஏற்பட்டால் அன்று ஒரு தயக்கம் ஏற்படும். ஆனுல் திரு. மாசிலாமணி எந்தப் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றினுலும் மக்கள் பயமின்றி அங்கு செல்வது வழக்கம். அந்தளவுக்கு மக்களுடன் மிக அன்பாகப் பழகியவர் மாசிலாமணி. அவ்வளவு இனியவர். அமரர் மாசிலாமணி, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, அக்கரைப்பற்று, குச்சவெளி முதலிய இடங்களில் கடமையாற்றியவர். இவரின் மும்மொழித்திறமை காரணமாக பொலிஸ் உயரதிகாரிகள் இவரை ஒரு எழுதுவினைஞர் போன்று நிலையத்திலேயே பணியாற்றவேண்டுவது வழக்கம். பொலிஸ் சார்ஜன்ட் பதவிக்குச் சிபார்சுசெய்யப்பட்டு பதவி உயர்வு கிடைக்கவிருந்தசமயம் இக்கால நிலைமைகள் காரணமாக '84-ல் தாமககவே இளைப்பாறினுர். இவர் இன்று இல்லாவிட்டாலும் இவர் மக்களுக்குச்செய்த உதவிகளை என்றும் மறக்க முடியாது.

-யசோதரா

## இளைப்பாறும் உப தபால் அதிபருக்கு பிரிவுபசாரம்

[கரவெட்டி]

''பொதுமக்களுக்குப் பணிபுரியும் தொண்டு மனப்பான்மையுடன் சேவை செய்யும் அரசாங்க ஊழியர்கள் இன்று மிகவும் குறைவு. மாத வேதனத்தை எப்படியாவது எடுத்துக்கொண்டு தமது சொந்த அலுவல்களைக் கவனித்துக் கொண்டும் அலுவல்களுக்கு வரும் அப்பாவிப் பொதுமக்களைச் சுரண்டிக் கொண்டும் வாழும் உத்தியோகத்தர்கள் பலர் வாழ்கிருர்கள். இத்தகைய சூழ்நிலையில் பிரதிபலன் கருதாது பொதுமக்களுக்குச் சேவை செய்த கடமை வீரர் திரு. இராசரத்தினம்.''

இவ்வாறு கரவெட்டிதபால் அலுவலகத்தில் நீண்டகாலம் உப தபால்அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு. க. இராசரத்தினத்துக்கு பொதுமக்களும், நெல்லியடி சனசமூக நிலையமும், வர்த்தகர்களும் இணைந்து நடாத்திய சேவை நலன் பாராட்டு விழாவில் உரைநிகழ்த்திய எழுத்தாளர் திரு. நெல்லை க. பேரன் தெரிவித்தார்.

நெல்லியடி அரசினர் மத்திய மகாவித்தியாலய இராசலிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு வித்துவான் பொன் சிவப்பிரகாசம் தலைமை வகித்தார்.

திருவாளர்கள் சிவப்பிரகாசம், எம். வேலுப்பிள்ளை, கே. நடராசா, எஸ். பரமேஸ்வரன், கே. குணரத்தினம், கே. ஆனந்தராஜா' வி. கே. ஆறுமுகம் ஆகியோரும் திரு. இராசரத்தினத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசினுர்கள்.

கரவெட்டி தபாற்கந்தோர் ஊழியர்கள். சனசமூக நிலையம், நெல்லியடி கலை இலக்கிய நண்பர் கழகம், பொது மக்கள், வர்த்தகர்கள், ஸ்பேஸ் விளையாட்டுக்கழகம், மாதர் சங்கம் என்பன சார்பாக இளைப்பாறிய தபால் அதிபருக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டதுடன் வாழ்த்துமடல்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## முல்லைத்தீவு பிரஜைகள் குழு

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழுக் கூட்டம் அண்மையில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

புதிய செயற்குழு உறுப்பினர்கள் வருமாறு:

போஷகர்: அருட் திரு. பொஸ்கோ மரியாம்பிள்ளை அவர்கள், தலைவர்: திரு. சி. கனகசபை (பாடசாலை அதிபர்), உபதலைவர்கள்: ஏ.சென் ஜோச் லோஷஸ்ரன், ச. முத்தையா (ஓய்வுபெற்றஅதிபர்), வே. துரைரத்தினம், இணைச் செயலாளர்கள்: கே. தியாகராசா (ஜே.பி.), பொ. சேதுபதி, பொருளாளர்: மி. அந்தோனிப்பிள்ளை.

### தீர்மானம்

முல்லை மாவட்ட கிராம சேவை உத்தியோகத்தர்பிரிவுகளில் அமைக்கப்படும் பிரஜைகள் குழுவின் தலைவர்கள் அல்லது செயலாளர்கள் செயற்குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படவேண்டும் என்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பலாத்கார வழக்கு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

மந்துவில் பலாத்காரவழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது முன்னுள் சட்ட வைத்திய அதிகாரி வராததினுல் விசாரணை 86 ஜனவரி 13ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கு யாழ். மேல்நீதி மன்றத்தில் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் நேற்றுமுன்தினம் காலை எடுக்கபபட்டது. வழக்கில் மந்துவிலில் 1975 ஆகஸ்ட் 31ம் திகதி ஒருஇளம்பெண்ணை பலாத்காரம் செய்ததாக வி. கந்தசாமி, த. இராசையா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அரசதரப்பில் அரச சட்டத்தரணி ஏ. ஞானதாசன் அஜராஞர். முன்னுள் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் பேரின்பநாயகம் வராததினுல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. [க]

## கிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் நத்தார் விழா

[புலோலி]

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் இம்மாதம் 24ம் திகதி கிறிஸ்மஸ்விழா நடைபெறும். சமய ஆராதனையையடுத்து பிற்பகல் பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலய போதகர் திரு, எஸ். எஸ். கருணைராஜ் 'பிதாவின் மைந்தன்' என்னும் பொருள்பற்றிஉரையாற்றுவார். இம்மாதம் 22ம்திகதி ஆச்சிரமத்தில்ஏழைகளுக்கான இலவச மருத்துவ சேவைகளை டாக்டர் எம். கே, லலிதகுமார் வழங்கினுர், 29ம் திகதி டாக்டர் ஏ. பாலகிருஷ்ணனின் இலவச மருத்துவ சேவைகளும் இடம்பெறுமென ஆச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். (ச)

## வைத்தியசாலை
# குறைபாடுகள் நீங்கினால்தான் நோயாளிக்கு நன்மை

(புலோலி)

''பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திமேம்பாடு கருதியே வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபை இக்கொடி வாரத்தை அனுஷ்டிக்கின்றது'

இவ்வாறு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்காக அபிவிருத்திச்சபையால் ஆரம்பிக்கப்பட்ட கொடிவார ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை நீதவான் திரு. கா. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரியும், அபிவிருத்திச்சபைத் தலைவருமான டாக்டர் சி. கணேசநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழா கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராஜாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது. ருத்தித்துறை நீதவான் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது, வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் நீக்கப்படவேண்டும் அப்போதுதான்இங்குசிகிச்சைபெறவரும் நோயாளிகள் நன்மைபெற முடியும். வைத்தியசாலைகளில் மருர்துகள் தட்டுப்பாடாக இருக்க இடமளிக்கக்கூடாது. மருந்துகள் தட்டுப்பாடாக இருந்தால்நோயாளிகள்பெரும் பாதிப்படைவார்கள்.

பருத்தித்துறை சமூகசேவையாளரான திரு. ஏ. நாகரத்தினம் வைத்தியசாலைக்கு முச்சக்கரவண்டியொன்றை வாங்குவதற்காக 2000 ரூபா நிதியை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேசநாதனிடம் கையளித்தார்.

(க)

# 'புராதன ஆலயங்கள் புனரமைக்கப்பட வேண்டும்'

(புங்குடுதீவு)

''புதிய ஆலயங்களைத் தோற்றுவிக்காது புராதன ஆலயங்களைத் தேடிச்சென்று புனரமைக்கவேண்டும். பாடல் பெற்ற திருக்கேதீச்சரம் பாழடைந்து கிடந்த நிலையைக்கண்டு வருந்திய நாவலர் பெருமான் தனது சமயப்பிரசங்கங்களில் எல்லாம் திருக்கேதீச்சரத்தைப் புனரமைக்குமாறு மக்களைத்தூண்டினார். அவரது தூண்டுதலினால் ஈர்க்கப்பட்ட யாழ்ப்பாணத்துத் தனவந்தர்கள் திருக்கேதீச்சரப் பிரதேசத்தை வாங்கிச்சைவச் சொத்தாக்கினார்கள். என்றோ யாழ்ப்பாணத்துத் தனவந்தர்கள் இட்டகால்கோள் சேர். கந்தையா வைத்தியநாதனின் காலத்தில் பழமாகிக்கனிந்தது இந்த முன்னுதாரணத்தைச் சைவர்கள் பின்பற்றி பழைய ஆலயங்களைத்தேடிச்சென்று திருப்பணிபுரிய வேண்டும்.''

புங்குடுதீவு நுழைவாயில் மடத்துவெளியம்பதி அருள்மிகு வீரகத்திப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபைப் புனரமைப்புக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் தமிழர் கலாச்சாரச்சங்கத்தலைவர் திரு எஸ். கே. மகேந்திரன் தெரிவித்தார்.

ஆலய அருகாமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இடம்பெற்ற நிர்வாகிகள்தெரிவின் போதுகாப்பாளர்களாக திரு. எஸ். கே. மகேந்திரன், சிவஸ்ரீ நா. கணேசராசக்குருக்கள் ஆகியோரும், தலைவராக க. அம்பலவாணரும், உபதலைவர்களாக சி. க. உலகநாதன், வே. சுப்பிரமணியம் ஆகியோரும், செயலாளராக ப. கனகலிங்கமும், உபசெயலாளராக நா. இராசகுமாரும், பொருளாளராக இ. இராசமாணிக்கமும், உபபொருளாளராக ச. நாகேஸ்வரியும், எண்பார்வையாளராக க. கா. கந்தசாமியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# ஆசிரம செயற்பாடுகள் இடைநிறுத்தம்!

[சுழிபுரம்]

''எமது நாட்டில் தலைதூக்கியிருக்கும் இனக்கலவரத்திற்கு ஒரு முடிவு வரும்வரை அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆசிரமச் செயல்பாடுகளை நிறுத்தி வைக்கலாம்'' என்று ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள், ஆசிரம நிர்வாகத்தினருக்கு பணித்துள்ளார்.

மாத வெளியீடாகிய 'திருநெறி' வெளியீடும் இம்மாதத்துடன் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஆசிரமத்தை சேர்ந்த திரு. வே. கனகநாயகம் இச்செய்தியை தமது அங்கத்துவ இயக்கப் பிரதிநிதிகளுக்கு அறிவித்துள்ளார்.

# 'வாழ்நாள் முழுவதும் பற்களைப் பாதுகாக்க வேண்டும்'

(சுண்டிக்குளி)

'உங்கள் பாற் பற்கள் விழுந்து புதுப்பற்கள் முளைக்கும் பருவமாகிய இக்காலத்தில் இந்தப் புதிய பற்களை உங்கள் வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பது மிகவும் பிரதானம்.'

ஆறு மாதத்திற்கு ஒருதடவையாகிலும் பல் வைத்தியரிடம் அல்லது பற்சிகிச்சைத் தாதியிடம் பற்களைக் காட்டி பரிசோதிக்க வேண்டும்.'

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரால் நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடத்தப்பட்ட தேசிய பிள்ளைகள் பற் சுகாதார வார நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பல் வைத்திய நிபுணர் டாக்டர் திரு. பி. யோகநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

தேசிய பற சுகாதார வாரம் வட்டு. லயன்ஸ் கழக தலைவர் லயன் டபிள்யூ. என். தேவகடாட்சம் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது உரையில் பல்லுப் போனால் சொல்லுப் போச்சு' என்ற முதுமொழிக்கிணங்க சிறியவர்களும் பெரியவர்களும் தமது பற்களைச் சுத்தமாக வைத்திருக்குமாறு கேட்டுக் கொண்டார்.

பற்சிகிச்சை முகாமுக்கு நவாலியில் உள்ள 4 பாலர் பாடசாலையைச் சேர்ந்தசுமார் 150 பிள்ளைகள் தமது பெற்றோருடனும் பாடசாலை ஆசிரியைகளுடனும் சிகிச்சைபெற சமூகமளித்திருந்தனர்.

இவ்வைபவத்தில் லயன் வலயத தலைவரும், வட்டு. லயன்ஸ் கழக சுகாதார குழுத் தலைவருமான டாக்டர் ரி. பகீரதன் நவாலி குடும்பநல சேவையாளர் திருமதி பி. கனகராசா ஆகியோரும் கலந்து கொண்டுஉரையாற்றினார்கள். நவாலி வை. எம். சி. ஏ. செயலாளர் திரு. என். அன்புராசா இந்நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்திருந்தார்.

# "விடுதலைப் போராட்டத்தில் அராஜகமா?" 'தீப்பொறி' கேட்கிறது

(யாழ்ப்பாணம்)

''இன்று இயக்கஅங்கத்தவர்களுக்கே, ஆயுதம் ஏந்திய போராளிகளுக்கே பாதுகாப்பில்லை என்ற நிலை. தமிழ் மக்களின் விமோசனத்திற்காகப் போராடும் விடுதலைப் போராளிகள் மக்களின் சொத்துக்கள். இவர்களை அளிப்பதானல் இந்த இயக்கங்கள் எதனை சாதிக்கப்போகின்றன? அண்மையில் முன்னெப்போதுமில்லாத வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அராஜகம் தலைவிரித்தாடத்தொடங்கியுள்ளது. ஒவ்வொரு தமிழ் மகனும் இதனல் பாதிக்கப்படும் அச்சத்தால் வீட்டினுள் அடைபட்டுக்கிடக்கும்நிலைமை தோன்றியுள்ளது. இந்த நிலைமைதொடருமானல் தமிழ் மக்களின்எதிர்காலம்என்ன?''

இவ்வாறு 'தீப்பொறி' வெளியீட்டினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இந்த நிலைமை இன்று திடீரெனத் தோன்றியதா? இல்லை விடுதலைப்போராட்டத்தின்ஆரப்ப நாள் முதல் சிறிது சிறிதாக தோன்றி வளர்ந்து இன்று பூதாகரவடிவம்பெற்றுள்ளது.

''இத்தனை காலமும் இதனை அனுமதித்தெதப்படி?

''யாருக்கோ நடப்பதாக எண்ணி பேசாது இருந்தோம். எமக்குச் சாதகமாக இருந்த போது நியாயப்படுத்தினேம். தேவைப்பட்ட போதெல்லாம் நாமே செய்துவிட்டு மறுப்பறிக்கை விட்டோம் அல்லது நியாயப்படுத்தினேம்.

விளைவு இந்த அராஜகத்தின் வளர்ச்சிக்கு தவிர்க்கமுடியாமல் நாமே பலியானேம்,

இப்போதுதிடுக்கிட்டு விழித்தெழுந்து அராஜகம் பற்றி கோஷமெழுப்புகிறோம். அநீதியைக்கண்டிக்கிறோம். எம்மால் மாற்றப்பட்ட மக்களை விழித்தெழுமாறு அறைகூவுகிறோம். துக்கதின, கர்த்தால் அனுஷ்டிக்குமாறு வற்புறுத்துகிறோம். கைக்குண்டுகளை வெடிக்க வைத்து கடைகளை மூடுவிக்கிறோம். துப்பாக்கி முனையில் பத்திரிகையாளரை மிரட்டி அறிவித்தல் விடுக்கிறோம், எமக்கு அந்தளவிற்கு யோக்கிதை உண்டா?

'எமது இழப்பிற்காசமக்களை துக்கதினம் கொண்டாடுமாறு கேட்கும் தார்மீக பலம்எமக்கு உண்டா?

'இயக்கங்களின் அவசரவிசாரணைகளால் தவறான முடிவுகளால் சமூக விரோதிகளாக கொலைசெய்யப்பட்ட பொதுமக்கள் எத்தனை பேர்? கொல்லப்பட்ட மாற்று இயக்கப் போராளிகள் எத்தனை பேர்?

''தமது இயக்கத்துள்ளேயே நீதியைக் கேட்டதற்காக கொன்று புதைக்கப்பட்ட தோழர்கள் எத்தனை பேர்?

''நாமும் சேர்ந்துதானே அவர்கள் புதைகுழிகளில் மண்ணை அள்ளிப்போட்டோம். ஏதும் தெரியாதென சாதித்தோம்.

ஊட்டிவளர்க்கப்பட்ட அதே அராஜகம் இன்று எமது மார்பில் பாயும்போது விழிப்பு வந்துவிட்டதா?

''மக்களைத் துணைக்கழைக்கிறீர்கள்? காலங்கடந்த ஞானம் தோழர்களே?

''மக்கள் உறங்கிவிட்டார்கள். இல்லை உறங்க வைக்கப்பட்டார்கள்.

''லங்கா புவத்' செய்திக்கும் இயக்கச்செய்திக்கும் வேறுபாடு காணமுடியாது திண்டாடியவர்கள் அநீதிகளை அடுத்து, அடுத்து முகம் கொடுப்பதைத் தவிர்ப்பதற்காகக் கண்களை இறுக்கமூடிக் கொண்டார்கள்.எமது கொள்கைகள், இலட்சியங்கள், தியாகங்கள், அர்ப்பணிப்புகள் எல்லாமே விழலுக்கு இறைத்த நீர்தானு?

''அந்நிய மண்ணில் மெய்க்காவலர்கள் படைசூழ ஆடம்பர மாளிகைகளில் வாழும், கார்களில் பவனிவரும் தலைமைகள் இப்பிரச்னைகளை உணர்ந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கமுடியாது. தமது தலைமையைக் காக்க இயக்கச் செல்வாக்கை நிலைநாட்ட, பொதுமக்களை, சக இயக்கப் போராளிகளை போராளிகளைக் கொலைசெய்யக்கட்டளையிடும் இவர்கள் தமது இயக்கத்திலுள்ள ஒவ்வோர் போராளியினதும் உயிருக்கு உத்தரவாதம்தரமுடியுமா?முடியாது. விளைவு தலைமையின் சதுரங்க விளையாட்டில் கீழணியிலுள்ள விசுவாசமிக்க போராளிகள் அநியாயமாகப்பலியானார்கள்.

''ஆகவே போராளிகளை, அப்பாவி மக்களை கொலைசெய்வதை உடனடியாக நிறுத்த முன்வருவோம். போராடும் போராளிகளுக்கு நாம் அணைவரும் நண்பர்கள் என்பதை உணர்வோம்.

''தவறான சக்திகளைத் தூக்கி எறியுங்கள். மக்கள் மட்டுமே வரலாற்றைப் படைப்பவர்கள் என்பதை உணர்த்திக்காட்டுங்கள். புரட்சிகரத் தலைமையை உருவாக்கிப் பேரராட்டத்தை சரியான பாதையில் முன்னெடுப்போம். [ஐ]

# நலன்புரிச் சங்கங்களின் இலட்சணம்பற்றி வங்கிப் பிரமுகர்

(கரவெட்டி)

''நலன்புரிச் சங்கங்கள் பல இன்று வெறும் தேனீர் கொடுக்கும் சங்கங்களாகவும் கொத்தமல்லி, சீரகம் வாங்கிக் கொடுக்கும் நிலையங்களாகவும் செயற்பட்டு வரும் வேளையில் வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர்களின் நலன்புரிச் சங்கம் மாணவர்களுக்கு இலவச தட்டச்சு,சுருக்செழுத்து வகுப்புக்களை நடாத்திச் சான்றிதழ்கள் வழங்குவதுடன் பொது மக்களுடனும் தனது நல்லுறவைப் பலப்படுத்தியுள்ளது. இது பாராட்டுதற்குரிய செயல். இதன் செயற்பாடுகளுக்கு முன்னேடியாக உள்ள சுருக்செழுத்துப் பயிற்சியாளர் திரு. சிவச்சந்திரதேவன் பாராட்டிற்குரியவர்.''

இவ்வாறு வட பிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் திரு. ம. கணேசசுந்தரம் வல்வை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச்சங்கத்தினரால் நடாத்தப்பட்ட இலவச தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புக்களில் தேர்ச்சி பெற்றோருக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

மாலிசந்தி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு வல்வை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. ச. சேனாதிராஜா தலைமை வகித்தார். கௌரவ விருந்தினராக கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு.வை. வேலும்மயிலும், வடபிரதேச மக்கள் வங்கி உதவி பிராந்திய முகாமையாளர் திரு. இ. சிவசிதம்பரம், பருத்தித்துறை உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரிகளான திருவாளர்கள் ப. சச்சிதானந்தம், வ. க. ஈசுரபாதம் ஆகியோர் கலந்து கொண்டு நலன்புரிச்சங்கத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

பயிற்சியாளருக்கான நிகழ்ச்சிகளில் செல்விகள் வனிதா இரத்தினகோபால், மாலினி தவகுலரத்தினம், கயல்விழி லிங்கரத்தினம் ஆகியோரின் பேச்சுக்களும் செல்வி இராஜேஸ்வரி தியாகராஜக் குருக்களின் கவிதையும் செல்விகள் அரியமலர் கதிர்காமு, பற்றீசியா பிரேமினி ஞானனந்தராசா, நீலாம்பிகை சின்னையா ஆகியோரின் பாடல்களும் இடம்பெற்றன.

சுருக்கெழுத்துடன் தட்டெழுதும் கட்டாயமாக இணைந்து பயில வேண்டியது அவசியமா? என்ற பொருள் பற்றி விவாத அரங்கும் நடந்தது.

## பதவிக்கு வந்தால் ஜனதிபதி மார்கோஸை கைது செய்வாராம்

(பிலிப்பைன்ஸ்)

தான் ஜனதிபதியாகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், தனது கணவரைக் கொன்ற குற்றத்திற்காக, திரு. மார்கோஸை கைது செய்வேன் என பிலிப்பைன்ஸின் முன்னாள் எதிர்கட்சித் தலைவரான காலஞ்சென்ற அகியூனோவின் விதவை மனைவியும், தேர்தலில் ஜனதிபதி மார்கோஸை எதிர்த்து போட்டியிடுபவருமான திருமதி கொராஸன் அகியூனோ கூறியுள்ளார்.

பத்திரிகையாளர் மாநாடொன்றில் பேசிய அவர் தாம் தெரிவுச் செய்யப்படின் தன் உண்மையான உழைப்பைத் தவிர வேறொன்றும் நாட்டுக்கு வழங்க முடியாதிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

## உண்மை நிலை கூற 'உண்மைகள்'

[யாழ்ப்பாணம்]

திருமலை, வவனியா, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள அகதி மக்களின் உண்மையான நிலவரங்களை எடுத்துக் காட்டும் நோக்குடன் சங்கிலியன் புனர்வாழ்வுக்கழகம் 'உண்மைகள்' எனும் பெயரில் மாதாந்த இதழை வெளியிட்டு வருகிறது.

சங்கிலியன் புனர் வாழ்வுப் பத்திரிகை செய்தித் தொடர்பாளர் திரு. த. குமரேஸ்வரனை ஆசிரியராக்கொண்டு 'உண்மைகள் பத்திரிகையின் முதல் இதழ் வெளிவந்துள்ளது. [ஐ]

## "இறைவனை வேண்டி இடர்களைக் களைவோம்"

(சுழிபுரம்)

''எமக்கு ஏற்பட்டுள்ள விக்கினங்கள் யாவற்றையும் நீக்கும் சக்தி இறையருளினல் மட்டுமேமுடியும். ஆதலால் நாம் யாவரும் உள்ளத் தூய்மையுடன் இறைவனைவணங்கி எமக்கு இன்று ஏற்பட்டுள்ள இடர்களைக்களைவோம். மன அமைதியும் இடர்களும் நீங்க சைவமதத்தவர்களாகிய எமக்கு விநாயக வழிபாடு மிகவும் அவசியமாகும். விநாயகர் வேண்டியபேறுகள் யாவற்றையும் தருவதுடன், இடர்கள் யாவற்றையும் நீக்குவார்.''

இவ்வாறு பண்ணாகப் சத்சங்க வட்டப் பிரார்த்தனையில் பங்குகொண்டு சிறப்புரையாற்றிய சைவமணி, திரு. சி. மருதபிள்ளை குறிப்பிட்டார். பெருந்தொகையானவர்கள் பிரார்த்தனையில் பங்குகொண்டனர்.

## கட்டுரைப் போட்டி 3-வது இடம்

[வவனியா]

கம்உதாவ கட்டுரைப் போட்டியில் வவனியா மாவட்டத்தில் பூவரசன்குளம் மகா வித்தியாலய மாணவி செல்வி வி. விஜயலட்சுமி மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

# அகதிகள் குடியேற்றத் திட்டத்தில் ஆஸ்பத்திரி

(கிளிநொச்சி)

இம்மாதம் 5-ம் திகதி வெளியான 'ஈழநாடு' பத்திரிகையில் இடம்பெற்றிருந்த 'அகதிகள் குடியேற்றத் திட்டத்தில் ஆஸ்பத்திரி' எனும் செய்தி தொடர்பாக ஜெயபுரம் அகதிகள் குடியேற்றத் திட்ட முகாமையாளர் திரு. எஸ். தம்பிஐயா பின்வரும் விளக்கத்தை தெரிவித்துள்ளார்.

'முதலாவது குடியேற்றத் திட்டத்தில் அமைக்கப்படுகின்ற ஆஸ்பத்திரிக்கு அளவெட்டி ஆச்சிரமம் ரூபா 1,00,000 (ஒரு லட்சம்) மாத்திரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு ஜனவரி மாதளவில்தான் அந்த வேலைகளும் ஆரம்பமாகும். இரண்டாவது தும்புருவில் பிரதேசத்தில் சர்வோதயமும் காந்தி சேவா சங்கமும் இணைந்து 300-க்கு மேற்பட்ட குடும்பங்களை குடியேற்ற எடுக்கப்பட்டுள்ளகருத்தும் தவறானதாகும். ஆரம்ப முதல் சர்வோதய இயக்கம் மாத்திரமேமேற்படி குடும்பங்களை குடியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. காந்தி சேவா சங்கம் ஒரு சில வேலைத்திட்டங்களை எம்மிடம் நிதி உதவிபெற்று ஒப்பந்த அடிப்படையில் செய்து வருகின்றது. இவைதான் உண்மை நிலையாகும்.'

## "உப்பையும் இழந்தோம்" பிரதிஅமைச்சர் கவலை

(கொழும்பு)

"உப்பு உற்பத்தியில் வடமாகாணத்தை தற்காலிகமாக இழந்துவிடவேண்டிய நிலையில் நாமிருக்கிறோம். அத்துடன் ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு ஆகிய இடங்களில் உப்பளங்களை இழந்துவிட்டோம்."

நிதி திட்டமிடல் பிரதி அமைச்சர் ஜனாப் ஏ. எச். எம். நயினுமரிக்கார் பாராளுமன்றத்தில் உரைநிகழ்த்துகையில் கவலை தெரிவித்தார். கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தின்போது அவர் உரைநிகழ்த்துகையில் மேலும் குறிப்பிடுகையில், "இன்றையநிலையில் உப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நாம் தென்பகுதியிலுள்ள உப்பளங்களை அபிவிருத்திசெய்ய வேண்டும்" என்று ஆலோசனை தெரிவித்தார். (ய-மா)

## சித்திரப்போட்டி: பரிசுபெற்றோர்

(வவனியா)

வவுனியா திட்டமிடல் பிரிவால் நடத்தப்பட்ட உணவு போஷாக்குவார சித்திரப் போட்டியில் பூவரசன்குளம் மகாவித்தியாலய மாணவிகளான செல்விகள் சி. காஞ்சனா, இ. செல்வகுமாரி ஆகிய இருவரும் முறையே முதலாவது, இரண்டாவது இடங்களைப்பெற்று பரிசில்களைத் தட்டிக்கொண்டனர்.

## யானை தாக்கி விவசாயி மரணம்

[வவனியா]

இளம் விவசாயி ஒருவர் யானை தாக்கி மரணமானார்.

வவனியா-அலுகல்லு என்ற இடத்தில் உள்ள ஜயசிங்க என்ற விவசாயியே இச்சம்பவத்தில் மரணமானார்.

# நஷ்டஈடு கோரி வழக்கு

[புலோலி]

தீயினால் ஏற்டடும் அழிவுகளுக்கு எதிராக பருத்தித்துறை வர்த்தக நிறுவனம் ஒன்றை காப்புறுதி செய்து, வர்த்தக நிறுவனம் தீக்கிரையாக்கப்பட்டபோதும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உரிய நட்ட ஈட்டுத்தொகை ஒரு லட்சம் ரூபாவை வழங்கத் தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அடுத்த மாதம் 20-ம் திகதி விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பருத்தித்துறை நியூ கொழும்பு ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் கரவெட்டி துன்னாலையைச் சேர்ந்தவருமான திரு. சிவகுருநாதன் சிவராமலிங்கம் என்டவரே இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு எதிரான இவ்வழக்கை தாக்சல் செய்துள்ளார்.

இவர் சார்பில் சட்டத்தரணிகளான ஜி. எவ். சேதுகாவலர், ஆர். உருத்திரா ஆகியோர் சட்டத்தாணி ஆர். சதானந்தனின் அனுசரணையுடன் ஆஜராகின்றார்கள்.

கடந்த 84-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் திகதி முதல் 85-ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதிவரையான காலப்பகுதியில் அமுலில் இருந்த காப்புறுதியை கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றிருந்தார் என்றும் அதன்படி கூட்டுத்தாபனம் தீயின் அழிவால் ஏற்படும் நஷ்டங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா வழங்கப் பொறுப்பேற்றதாகவழக்காளி குறிப்பிட்டுள்ளார்.

1984-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2-ம் திகதி பருத்தித்துறையில் தமது நியூகொழும்பு ஸ்ரோர்ஸில் ஏற்டட்ட தீயினால் காப்புறுதிசெய்யப்பட்ட பொருட்களின் ஒரு பகுதி அழிக்கப்பட்டதாகவும், அவற்றின் பெறுமதி ஒரு இலட்சம் ரூபா எனவும் வழக்காளி மேலும் குறிப்பட்டுள்ளார்.

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாடனத்திற்கு இத் தீயினால் ஏற்டட்ட அழிவுகுறித்து அறிவிக்கப்பட்டும் காப்புறுதியின்படி நஷ்டஈடுவழங்கப்படாததால் 1985-ம் ஆண்டு ஆனிமாதம் 3-ம் திகதி வழக் ஒன்றைத் தாக்கல் செய்துள்ளதாகவும் வழக்காளி மனுவில் குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கின் மூலம் கூட்டுத்தாபனத்திடமிருந்து ஒரு லட்சம் ரூபா 1984 புரட்டாதி மாதம் 1-ம் திகதியிலிருந்து முழுத் தொகையும் செலுத்தப்படும் வரையும் சட்டரீதியான வட்டியையும் வழக்குக்கான செலவ தொகை உட்பட வேறுநிவாரணங்களையும் வழக்காளி கோரியுள்ளார்.

## முல்லையடியில் உபமின்நிலையம்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப்பகுதியிலுள்ள முல்லையடி என்ற இடத்தில் உபமின்நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு ஏழு லட்ச ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நீண்டகாலமாக நிலவிவரும் மின்சாரப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக இந்த உபமின் நிலையம் அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கென யாழ். அபிவிருத்திச்சபைச் செயலாளரினால்ஒதுக்கீடுசெய்யப்பட்ட ஏழு லட்சம் ரூபா நிதி இலங்கை மின்சாரசபையிடம் உபமின்நிலையவேலைகளை ஆரம்பிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். ரி. கதிரவேலுப்பிள்ளை இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

## பாவனையாளர் சங்கம் புனரமைப்பு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை கிழக்கு பாவனையாளர் சங்கத்தின் புனரமைப்பு பொதுக்கூட்டம் திரு. ஆர். எம். தியாகராஜா தலைமையில் நடைபெற்றது.

வட்டு கிழக்கு கிராமசேவை அலுவலர்திரு. அ. முருகேசு இக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் பாவனையாளர் சங்கத்தின் கடமைகளையும் அதன் செயற்பாடுகளையும் பற்றி விளக்கிக்கூறினார்.

சங்க நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது தலைவராக திரு. ஆர். எம். தியாகராசாவும் செயலாளராக திருமதி பேரின்பநாயகி சுப்பிரமணியமும் பொருளாளராக திருமதி தவராணி அருணசலமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## பற்சுகாதார வாரம்

[பண்டத்தரிப்பு]

தேசிய சிறுவர் பற்சுகாதார வாரத்தை முன்னிட்டு வட்டுக் கோட்டை லயன்ஸ் கழகமும், வட்டுக்கோட்டை கிழக்கு ஆரம்ப சுகாதார அபிவிருத்தி சபையும் இணைந்து சித்தன் கேணி மாதர் முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடத்திய இலவச பற் பரிசோதனையில் நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பற்பசையும், பிரஷ்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

சங்கானை அரசினர் வைத்தியசாலை பல் வைத்தியர் டாக்டர் பி. யோகநாதன் இந்த பற் பரிசோதனையை நடாத்தினார். வட்டு. லயன்ஸ் கழகத் தலைவர் திரு. உ. ந. தேவகடாட்சம் தலைமையில் நடைபெற்ற இந்த பற் சிகிச்சைக்கான ஒழுங்குகளை வட்டு. கிழக்கு ஆரம்ப சுகாதார அபிவிருத்திச் சபையின் தலைவரும் லயன்ஸ் வலயத் தலைவருமான டாக்டர் ரி. டகீரதன் செய்திருந்தார். சிறந்த டல்வரிசையுடைய நான்கு பிள்ளைகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு விசேட பரிசுப்பொட்டலங்களும் வழங்கப்பட்டன.

## இவர்களுக்கு தகுதிப்பரீட்சை

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் கடமையாற்றும் 24 விசேட சேவை அலுவலர்களில் பத்து விசேட சேவை அலுவலர்கள் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றவேண்டுமென்று திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளதாக வவனியா திட்டமிடல் அலுவலர் திரு. ரீ. துரைசிங்கம் தெரிவித்தார்.

## விசேடசேவை அலுவலர் கொலை

[வவனியா]

இனந்தெரியாதவர்களினால் கொலைசெய்யப்பட்ட விசேட சேவை அலுவலர் பூபாலசிங்கத்தின் இறப்புப் பதிவு, இன்னமும் பதிவுசெய்யப்படவில்லை.

மேற்படி அலுவலர் இறந்து சுமார் நான்கு மாதங்களாகியும் இறப்பு விஷயம் பதிவு செய்யப்படாததினால் இவருக்கு கொடுப்பனவுள் யாவும் மேற் கொள்ளமுடியாதுள்ளது.

---

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

## திரு. சு. சிவராசா



**மலர்வு: 9-1-1941**
**அகால உதிர்வு: 23-12-1984**

மாவை நகர் மலரின்
வாசனையாய் - வாசனுமாய்
யாவர் விழிகளுக்கும்
அகங்களுக்கும் ஓர் சுடராய்
கடமை யுணர்ச்சி
கண்ணியம் விசுவாசம்
உடனுக் குடனே
உதவும் மனப்பரிவு
மிளிர்ந்தவனாய் ஐக்கிய
வியாபாரச் சங்கத்தின்
வளர்வலுவாய் வாழ்ந்தாய்
வழிபடவும் பட்டாயே.

பாவனை யாளர்
பணியாளர், யாவருக்கும்
சேவகர்க்கும் அன்புச்
சேவகனாய், இல்லத்தில்
மனையாள் மக்கள்
மகிழ்சுற்றம் யாவர்க்கும்
கனிவார் பரிவார்
காவலனாய் வாழ்ந்திட்டாய்

லிப்டன் நிறுவனத்தில்
நீர்கொழும்பில் பணியாற்றி
தப்பி இனக்கலகம்
தாய்த்தேசம் சார்ந்தும்
சடுதியிலே தீமை
சாய்த்ததுவோ ஓர் மலையை!

அந்தோ அரியாய்
அருஞ்சிவரா சப்பெரியாய்
நொந்தோம் வெந்தோம்
நும்நினைவு சுட்டிடவே
எங்கள் உயிரில்
இணைந்த ஒளியுன்னை
எங்கும் என்றும்
ஏத்தி நினைக்கின்றோம்!

இல. 8, பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## செல்வன் சி. நிமலன்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை



**மலர்வு: 26-5-1974**
**அகாலஉதிர்வு: 23-12-1984**

எங்கள் குடும்ப
எழில்வான் ஒளிநிலவே
தங்கம் குணமாய்
சால் அரியே வீரியமாய்
ஆசிரியர் மார்கள்
அயலண்டை அன்பர்கள்
பாசம் பொழிந்து
பாராட்டச் சீராட்ட
வளர்ந்தாய் சொல்ல
வார்த்தையிலாச் சாதனைகள்
குழந்தை வயதுள்
குவித்தாய் ஓ! அற்புதனே!

பிள்ளையாய் வந்து
பிள்ளையார் அடிவணங்கிப்
பிள்ளையார் அடிசேர்ந்த
பிள்ளைப் பெரும்பேறே!

அற்ப உயிர்களுக்கும்
அருங்கருணை ஈவிரக்கம்
அற்புதமாய்த் தெய்வ
ஆராதனை தேமுகை
மலர்க் கரங் ளாலே
மலர் சூட்டி மலரடிக்கு
மலரடிக்கே உன்னை
மலராக அர்ப்பித்து
வான்மலராய் ஆன
மலரே! நி மலனே! உன்
ஆன்மநிலை ஏத்தி
ஆயிரம்பூத் தூவுகிறோம்!

**குடும்பத்தினர்.**

[2531]

## மரத்துடன் பஸ்.;.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லொறிகள், மினிபஸ்கள், கார்கள் மூலம் பளை ஆஸ்பத்திரிக்கும் வேறு சில தனியார் ஆஸ்பத்திரிக்கும் யாழ். ஆஸ்பத்திரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

வவனியாவில் புறப்படும்போதே பஸ் நிரம்பிவழிந்ததாகவும், மேலும் பிரயாணிகளை ஏற்றவேண்டாம் என்று வழியில் பிரயாணிகள் பல தடவை கூச்சலிட்டுக் கூறியதாகவும் பிரயாணி ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலை அகதிமுகாம்களிலிருந்து குடும்பத்துடன் பஸ்ஸில் வந்து கொண்டிருந்த சுசிலாதேவி(வயது 24) அன்னலட்சுமி [வயது 32] ஆகியாரும் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சுசிலாதேவிக்கு வாயில் காயம் ஏற்பட்டுள்ளது. அவர் பேசமுடியாத நிலையில் உள்ளார். அன்னலட்சுமியைச் சிகிச்சை பெற்றபின் நேற்று மாலை உறவினர் வந்து அகதிமுகாமிற்குக் கூட்டிச் சென்றனர்.

வவனியா கோவில்புதுக்குளத்தைச் சேர்ந்த எஸ். புவனேஸ்வரியும்(39 வயது) யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு நெஞ்சில் பலத்த உட்காயம் ஏற்பட்டுள்ளது. பேசக்கூடிய நிலையில் இருந்தார்.

விபத்துப் பற்றிப் புவனேஸ்வரி தெரிவிக்கையில், காலையில் வவனியாவிலிருந்து பஸ் புறப்பட்டு காலை 10 மணியளவில் முறிகண்கண்டிக்கு வந்தபோது பழுதடைந்துவிட்டதாகவும், அப்போது பஸ்ஸில் நூற்றுக்கு மேற்பட்டபிரயாணிகள் இருந்தாகவும் கூறினர்.

பஸ் திருத்தப்பட்ட பின்னர் புறப்பட்டதாகவும், வேகமாக வந்ததாகவும், பளைக்கு இருமைல்களுக்கு அப்பால், டஸ் ஆடத் தொடங்கியதும், பிரயாணிகள் கூச்சலிட்டதாகவும், பெரிய மரத்துடன் மோதியதாகவும், சில பிரயாணிகள் மயக்கமுற்று விழுந்துவிட்டதாகவும், பஸ் எங்கும் இரத்தம் காணப்பட்டதாகவும் கூறினர்.

காயமடையாத பிரயாணிகளும், அவ்வீதியால் வந்தவர்களும், காயமடைந்தவர்களை பஸ்ஸிற்குள்ளிருந்து மீட்டு எடுத்து லொறிகளிலும், மினிபஸ்களிலும், ஆஸ்பத்திரிக்கு அனுப்பியதாகவும் கூறினர்.

மரத்தின் கொப்பு ஒன்று வேகமாகவந்து பஸ்ஸின்முன் கண்ணுடியை உடைத்து உள் வந்ததினுல், பிரயாணிகள் காயமடைந்ததாகவும் அவர் கூறினர்.

காரைநகரைச்சேர்ந்த நல்லதம்பி சபாநாதன் [44 "] என்பவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்தவர்களில் சிலரை உறவினர்கள் கூட்டிச் சென்றுள்ளனர். [சு]

## புலிகள்...

1-ம் பக்கத் தொடர்ச்சி]

யிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

நான்கு மணிநேரமாக இருதரப்பினருக்குமிடையில் நடந்த சண்டையில் இலங்கை ஹெலிகாப்டர்கள் வகைதொகையின்றி குண்டுகளை வீசினரென்றும், ஒரு தீவிரவாதியும் நான்கு பொதுமக்களும் கொல்லப்பட்டனரென்றும், நால்வர் காயமடைந்தனர் என்றும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

போராளிகளின் பலத்த தாக்குதலினுல் விடுதலைப் புலிகளின் முகாமை நெருங்க முடியாதிருந்த இராணுவத்தினர் குண்டுகளை வீசியதுடன் ரொக்கெட்டுகளையும் ஏவினர் என்றும், இறுதியில் இராணுவத்தினர் மரணமுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் தூக்கிக்கொண்டு சென்றனர் என்றும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [து]

## 40 இளைஞர்கள் பாரிஸில் கைது

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நாற்பது தமிழ் இளைஞர்கள் பாரிஸில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களிடமிருந்து சுமார் 600 கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும், அவைகளின் பெறுமதி 8 லட்சத்து 75 ஆயிரம் என்றும் இந்த இளைஞர்கள் சர்வதேச போதைப் பொருள் கடத்தல் குழுவுடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ரா]


**உஷாமினி**

10-30, 2-30, 4-45, 6-45

GYMKATA

இது ஒரு மாதிரியான படம்

**லிடோ சினிமா**

10-30, 2-30, 4-30, 6-30

இலகுரேனிக் சுருமீனின் சாகசக் காட்சிகள் நிறைந்த

JAWS III

**எம்பயர்**

7 அடித்திரையில்

10-30, 2-30, 6-30 9-15

சுரேஷ் - நளினி

**எங்கள் குரல்**

**வெலிங்டன்**

10-30, 2-30, 6-30

சிவகுமார்-பிரமிளா நடித்த

பாலச்சந்தரின்

**அரங்கேற்றம்**

25-ந் திகதி முதல்

**நான் பாடும் பாடல்**


## அக்கரைப்பற்று...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேட்டையின்போது ஹெலிகாப்டர்கள் தாழப் பறந்து ஆயுதப் படையினருக்கு உதவின.

### மூன்று பகுதிகள்

அக்கரைப்பற்று ஏழாம், எட்டாம் குறிச்சிகளிலும், கோளாவில் எனும் பகுதியிலும் நேற்று இச்சோதனை நடைபெற்றது.

இப்பகுதிகளிலுள்ள வெலிங்டன், சாரதா ஆகிய இரு தியேட்டர்களும் பெரும் சேதத்திற்குள்ளாகி எரிந்துகாணப்படுகின்றன. ஆனுலும் உயிர்ச் சேதமேற்படவில்லை.

விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளவர்களுள் வயது வித்தியாசமின்றிச் சகல ஆண்களும் உள்ளனர். இப்பகுதிகளில் நேற்று வீடுகள் ஆண்களின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன. நேற்று மாலை வீடுகளில் ஒரே அழுகுரல் கேட்டது!

லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்ட சுமார் அறுநூறு பேரும் அம்பாறை மாவட்டத்திலுள்ள கொண்டவெட்டுவான் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## இந்தியா முன்னணியில்

டாக்கா, டிச. 22

பங்களாதேஷில் இடம் பெற்றுவரும் இரண்டாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா முன்னணியில் திகழ்கிறது.

நேற்றைய 3-வது நாள் போட்டிகளில் இந்தியா 10 தங்கப் பதக்கங்களையும், 4 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றது.

அடுத்து பங்களாதேஷ் 1 தங்கப்பதக்கம், 1வெள்ளி, 1வெண்கலம் பெற்றது. பாகிஸ்தான் 5வெள்ளி, 3 வெண்கலம், 3 வெண்கலம். இலங்கை 3 வெள்ளி, 3வெண்கலம்.

இலங்கை. இந்தியா, பாக்கிஷ்தான், பங்களாதேஷ், நேபாளம், மாலைதீவு, பூட்டான் ஆகியநாடுகள் இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்கின்றன. (கி)

## ஒளி விழா

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை கத்தோலிக்க சங்கம் நத்தார்-புதுவருட விழாவையொட்டி 'ஒளி விழா'வைப் பல இடங்களிலும் கொண்டாடவுள்ளது.

சீமெந்துத் தொழிற்சாலை வெள்ளிவிழா மண்டபத்தில் அமைதியான முறையில் ஒளி விழா 23ந் திகதி நடைபெறும். விழாவில் மயிலிட்டி-ஊறணிப் பங்கு மக்களால் தயாரிக்கப்பட்ட விசேட நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

மேற்படி சங்கத்தின் ஆதரவில் மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையிலும் இம்மாதம் 28ந் திகதி ஒளிவிழா நடைபெறும்.

## உயிர்-உடை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணிப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்கள் வடபகுதி மக்களைப் பெருமளவு உளரீதியாகப் பாதித்துள்ளது. இத்துடன் வடபகுதியில் அதிகரித்துவரும் இராணுவத்தினரதும், அவர்களது வாகனங்களினதும் நடமாட்டம் இப்பகுதி மக்களை மேலும் கலவரமடையச் செய்வதாகவுள்ளது.

''பயங்கரவாதம் என்ற போர்வையின்கீழ் பாதுகாப்புப் படைகளால் தாம் பாதிக்கப்படலாம் என வடபகுதிமக்கள் அஞ்சுகின்றனர்.

''எனவே இந்நாட்டின் தலைவர் என்ற வகையில் தமிழ்ப் பேசுபவர்களாஞலும் அவர் இந்நாட்டு மக்கள் என்ற முறையில் தமிழ் மக்களுக்கு அரசியலமைப்பின்கீழ் உங்களுக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்திப் பாதுகாப்பளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேம்.

''இத்துடன் எமது பிரச்னைக்கு இராணுவ நடவடிக்கைகளிலல்லாது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்வகையில் அரசியற் தீர்வுகாணும்படி கேட்டுக் கொள்கிறேம்.'' [கி]

## சுதுமலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புவத்' நேற்று அறிவித்துள்ளது.

இத்தாக்குதலின்போது நான்கு கைக்குண்டுகளும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் 'லங்கா புவத்' மேலும் தெரிவித்தது.

இதேவேளை பலாலி விமான நிலையத்தைத் தாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியையும் பாதுகாப்புப்படையினர் முறியடித்துள்ளனர் என்றும், இத்தாக்குதலை நடத்தியவர்கள் நீலநிறச் சீருடை அணிந்திருந்தார்கள் என்றும் 'லங்கா புவத்' நேற்று அறிவித்தது. (து)

## 86 வாகனவரி
## கட்டணங்களை பொலிஸ்நிலைய வங்கியில் செலுத்தவும்!

[யாழ்ப்பாணம்]

வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெறுகின்ற வாகன உரிமையாளர்கள் 'அனுமதிப்பத்திர வரிக் கட்டணங்களை'ப் பணமாக யாழ். பொலிஸ் நிலையத்தில் இயங்கும் இலங்கை வங்கிக் கச்சேரிக் கிளையில் செலுத்தும்படி வேண்டப்படுகின்றனர்.

1986ம் ஆண்டுக்கான வாகன அனுமதிப் பத்திரங்கள் தற்போது யாழ். கச்சேரியில் வழங்கப்படுகின்றன. இந்த அனுமதிப் பத்திரங்களைப்பெற விண்ணப்பிப்பவர்களே இவ்வாறு பணத்தை மேற்படி வங்கியில் கட்டும்படி கேட்கப்பட்டுள்ளனர். [ஐ]

## கிளிநொச்சி
## புதிய சந்தை விரைவில் திறக்கப்படும்

[கிளிநொச்சி]

கிளிநொச்சியின் புதிய பொதுச் சந்தை சில தினங்களில் திறக்கப்படவுள்ளது. இதற்கான துரித நடவடிக்கைகளை அரசாங்க அதிபர் என். ஜெயநாதன், இணைப்பதிகாரி மேஜர் கொப்பசடுவ, கிளிநொச்சி பட்டின அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ந. பாலசுப்பிரமணியம் முதலானோர் மேற்கொண்டுள்ளனர்.

அரசாங்க அதிபர், இணைப்பதிகாரி முதலானோரின் வாசஸ்தலத்திற்கருகில் முன்னுள் அமைச்சராகவிருந்த திரு. செ. குமாரசூரியரால் பல லட்சம் ரூபா செலவில் புதிய சந்தை கட்டப்பட்டு இதுவரை திறக்கப்படாமலிருந்தது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ்நிலையம் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டபின்னர் முன்னைய பொதுச்சந்தை சேதப்படுத்தப்பட்டு கட்டிடங்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது தெரிந்ததே.

இதன்பின் பஸ் நிலையம், சந்தை முதலானவை பழைய பஸ்நிலையத்தில் இயங்கிவருவதும் வாசகர்கள் அறிந்ததே.

எதிர்வரும் 23-ம் திகதி திங்கட்கிழமை பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு புதிய சந்தையில் இடங்கள் கட்டப்படவுள்ளன.

## தோளோடுதோள் நின்ற 'ரெலோ'வுக்கு புலிகள் நன்றி

[யாழ்ப்பாணம்]

கடந்த சனிக்கிழமை காலை சுதுமலைப் பகுதியில் இடம்பெற்ற ஆகாய மார்க்கமான இராணுவ முற்றுகையின்போது தமிழீழ விடுதலை இயக்கம் [ரெலோ] தம்மோடு தோளோடுதோள் நின்றதாகவும், இதற்கு தாம் நன்றி தெரிவிப்பதாகவும் தமிழீழவிடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அரியாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் இராணுவ முற்றுகை முறியடிக்சப்பட்டதாகவும், கோண்டாவிலைச் சேர்ந்த கார்த்திக் என்ற இளம் போராளி மட்டும் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுதுமலைத்தாக்குதலில் அச்சுவேலியைச்சேர்ந்த அல்பேர்ட் (ரூபன்) என்பவர் மட்டும் மரணமானதாகவும் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

நவீன ஆயுதங்கள் கொண்டு அரியாலை, சுதுமலை இராணுவ முற்றுகைகளை நவீன போர் முறைகளில் முறியடித்ததாகவும் புலிகள் நேற்று மேற்குறிப்பிட்ட தாக்குதல்கள் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## நகை பொருட்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தோர் வீடு ஒன்றில் புகுந்து தேடுதல்வேட்டை நடத்தி வீட்டில்இருந்த குடும்பப் பெண் ஒருவரிடம் பவுண் நகைகளையும் வேறுசில பொருட்களையும் அபகரித்துச் சென்றதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திருமதி ச. ஸ்ரெல்லா என்பவர் பிரஜைகள் குழுவுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் முறைப்பாடு செய்துள்ளார்.

## இணைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினுர்கள்.

இச்சந்திப்பு கிளிநொச்சி இராணுவ முகாமில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

முதலில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் சந்தித்தனர். அதனைத்தொடர்ந்து பிரஜைகள் குழுத்தூதுக்குழுவினரான டாக்டர் கே. சுப்மையா, சட்டத்தரணி ரி. ஸ்ரீஸ்க்கந்தராசா டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி திரு. சவேசியஸ், அ. தாமோதரம்பிள்ளை, எஸ். கோபால் ஆகியோர் இணைப்பம்காரியை சந்தித்தனர்.

கைதுசெய்து விடுவிக்கப்படாதிருக்கும் இளைஞர்கள் விவகாரம் உட்பட பல்வேறு விஷயங்களும் இணைப்பதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாக பிரஜைகள் குழுவினர் தெரிவித்சனர்.

இச்சந்திப்பின்போது கேணல் ஜே. தம்முனியும் உடன் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## விசாரணையில் 18 பேர் மட்டுமே

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் ஆயுதப் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் கைதானவர்களில் 18பேர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மற்றையோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ய)

## மக்கள் நடவடிக்கை

[சுழிபுரம்]

சுழிபுரம் பகுதியில் களவாக மின்சார பாவனை செய்பவர்கள் மேல் பொதுமக்கள் நடவடிக்கை எடுத்து மின் வயர்களைத் துண்டித்தனர். சுழிபுரம் கிழக்கு, கல்லவேம்படி, காளுவன் பகுதிகளில் மக்கள் ஒன்றுசேர்ந்து இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பெருந்தொகையான மின் பாவனையாளர்கள் களவாக மின் பாவனை செய்பவர்களால் பெரிதும் பாதிக்சப்பட்டுள்ளனர். தினமும் களவாக மின் பாவனை செய்பவர்கள்மீது மேல்நடவடிக்கை எடுப்பதாகப் பொதுமக்கள் முடிவுசெய்துள்ளனர்.

# கலைப்பட்டதாரிகள் நியமனப் பட்டியல்

(முன்னைய தொடர்ச்சி)

செல்வி என். ரஜனி[சுழிபுரம்], செல்வி கே. பாக்கியலக்சுமி [பருத்தித்துறை], கே. சுந்தரலிங்கம் [சாவகச்சேரி[, ஏ. அருள்தாசன் [காரைநகர்], செல்வி எஸ். விஜயலச்சுமி [நயினாதீவு], செல்வி எம். செல்வராணி [யாழ்ப்பாணம்], செல்வி எஸ். செல்வராசா கரவெட்டி) செல்வி என். குமாரசாமி[நல்லூர்], செல்வி பீ. குமாரசாமி[தெல்லிப்பளை[ செல்வி ஏ. சதாசிவம் [தெல்லிப்பளை] செல்வி வை. இராஜேந்திரம் [தெல்லிப்பளை] செல்வி கே. மகாலச்சுமி [யாழ்ப்பாணம்] கே. வரதராஜ் மூர்த்தி[தாளையடி], செல்வி எஸ் விவேகானந்தன்[பருத்தித்துறை], செல்வி நளினி சபாரத்தினம் [சரவெட்டி] செல்வி சீ. பொன்னையா வட்டுக் கோட்டை, செல்வி இ. பசுபதி பருத்தித்துறை, சகோதரி ஏ. சேவியர் யாழ்ப்பாணம், செல்வி எஸ். சகுந்தலாதேவி சங்கத்தானை, செல்வி எஸ். சுப்பிரமணியம் பரந்தன், எம். இக்னேசஸ் யாழ்ப்பாணம், வீ. கருணமூர்த்தி புலோலி, திருமதி ஜி. கோணேஸ்வரி தெல்லிப்பளை, செல்வி பீ. தாமோதரம் துறைநீலாவணை, செல்வி எஸ். செல்வராஜா மட்டக்களப்பு, செல்வி ஆர். தங்கராஜா மட்டக்களப்பு, கந்தசாமி, செங்கலடி, செல்வி எம். பூபாலபிள்ளை மட்டக்களப்பு, செல்வி எஸ். விஸ்வலிங்கம் மட்டக்களப்பு, எஸ். கணேசன் முறக்கொட்டாஞ்சேனை, செல்வி எம். யோகேஸ்வரி முறக்கொட்டாஞ்சேனை, செல்வி கே. எஸ். செல்லையா செங்கலடி, திருமதி வீ. ஆர். ஞானப்பிரகாசம், காத்தான்குடி, ரி கோபாலகிருஷ்ணன் குருக்கள்மடம் செல்வி பீ. கணபதிப்பிள்ளை குருக்கள் மடம் செல்வி எஸ். கணபதிப்பிள்ளை குருக்கள் மடம், சீ. நடராஜா குருக்கள் மடம், திரு. பீ. பேரின்பராஜா குருக்கள்மடம், செல்வி ஆர். சுகந்தி மட்டக்களப்பு, செல்வி எஸ். சிற்ரஞ்சனி கொழும்பு, செல்வி கே, கோவிந்தன் குருக்கள்மடம், செல்வி எல். ஜெயராணி காத்தான்குடி, திருமதி ஜி.குழந்தைவடிவேல் களுவாஞ்சிக்குடி, செல்வி எஸ். இந்திராணி துறைநீலாவணை, செல்வி எஸ். சித்ராங்கனி களுவாஞ்சிக்குடி, ஏ. நசீறுதீன் சம்மாந்துறை, எம். ரி. இக்பால் அக்கரைப்பற்று. ஐ. எல். எம். அபூபக்கர் காரைதீவு, செல்வி பீ லெட்சுமி அக்கரைப்பற்று, செல்வி ஆர். எம். எஸ். ஜோசப் மானல், திருமதி கே. எல். கமறுன்ஸியா சம்மாந்துறை, ஏ. எல். எம். ஜௌபர் சம்மாந்துறை, வீ. தியாகராசா காரைதீவு, எம். ஜே. ரி. இக்பால் அக்கரைப்பற்று, ஐ. எல். எம். அபூபக்கர் காரைதீவு, செல்வி பீ. லட்சுமி, அக்கரைப்பற்று, செல்வி கே. தர்மலிங்கம் உருத்திரபுரம், செல்வி ஜே. நடராஜா பரந்தன், ரி. சடாச்சரசர்மா புதுக்குடியிருப்பு, ஜே, கிறிஸ்தோபர் ஒட்டிசுட்டான், செல்வி எஸ். குலேஸ்வரி துணுக்காய், செல்வி என். விஜயகுமாரி புதுக்குடியிருப்பு, செல்வி எம். எச். சம்சு நோனு யட்டிவில்ல வெடுவ, செல்வி எல். எம். ஞானவதி திருக்கேதீஸ்வரம், செல்வி ஏ. எம். யோசேப்பின் உயிலங்குளம், செல்வி என். செபஸ்தியம்மா நானாட்டான், செல்வி எஸ். மார்க் ண்டு புளியங்குளம், செல்வி ஜே. எவ். ஜி. அன்ரனிப்பிள்ளை வவனியா, செல்வி பீ. எஸ். அமிர்தரத்தினம் ஓமந்தை, திருமதி எஸ். பிரபாகரன் வவனியா, செல்வி என்.வசந்தகுமாரி, திருகோணமலை, திருமதி எஸ். நாகராணி சைனுபே, செல்வி வீ. இராஜரத்தினம் மூதூர், செல்வி எம். சுப்பிரமணியம் திருகோணமலை, செல்வி ஆர். சித்திரவேலாயுதம் திருகோணமலை, எம். எம். நாகீப் மூதூர் செல்வி ரி. நாகணி மூதூர், ஏ. எம். சாலிகு கிண்ணியா, பி எகியா கிண்ணிய, ஏ. எம். ஆனிப்வெப்பை கிண்ணியா, செல்வி என். எஸ். எம். சுபைர் கலாகெண்டினே, செல்வி என். எச்.எம்.மொகிதீன் கொழும்பு, செல்வி ரி. கந்தையா கொழும்பு, எஸ். எச்.எம். நௌபல் பொால்ல, ஆர். மல்மார்க்கீசன் கொழும்பு, செல்வி எம். எஸ். எவ். சாலிகு கண்டி, செல்வி எம். எஸ். சித்தி சாஹிரா தெல்தெனிய, செல்வி கே. எம். பாத்துமா பீபி கண்டி, எம். எவ். எம். சாமீம் கம்பளை, எச். எம். எம், கலீல் வாகக்கோட்டை, செல்வி எம்.எச்.எம். சகிடியா மாவனல்லை, திருமதி எம் கே. எவ். சதீக்கா காலி, செல்வி கே. ஆர்.கைறுன்பீவி ஹாலி-எல, செல்வி எஸ். மரிக்கார் ஹேமதுகம, செல்வி பீ. சிவபாதசுந்தரம் யாழ்ப்பாணம், எஸ். சுப்ரமணீஸ்வரன் புதுக்குடியிருப்பு, எம் விஜயரத்தினம் செம்மலை, செல்வி ஆர்.கந்தசாமி தம்பலகாமம், செல்வி ஐ. இந்திராணி கரவெட்டி, செல்வி எஸ். சீத்தாதேவி தெல்லிப்பளை, ரி. பாலகிருஷ்ணன் யாழ்ப்பாணம், பீ.சதாசிவம் பூவரசங்குளம், என். செல்வரத்தினம் முல்லைத்தீவு, ஏ. அமிர்தலிங்கம் முல்லைத்தீவு, பி. செல்வத்துரை யாழ்ப்பாணம், செல்வி எஸ். எஸ். பரசிவம் சுண்ணகம். செல்வி எம். மனோரஞ்சிதராணி கொக்கட்டிச்சோலை, எம். எஸ். எம். பாரூக் குருணகலை, திருமதி ரி. விக்கிரமராச்சி தங்காலை, செல்வி என். நாகமுத்து தம்பிலுவில், எம்.எச். பதுர்தீன் காலி, ஏ. சௌந்தரலிங்கம் யாழ்ப்பாணம், செல்வி ஏ. ஆழ்வாப்பிள்ளை புலோலி, திருமதி ஏ. இந்திரகுமார் திருகோணமலை. செல்வி ரி. சித்திரவேலு திருகோணமலை, எம். சீ, எம். லாபீர் மாத்தளை, கே. குலசேகரம் பூநகரி, செல்வி பீ. பரமேஸ்வரநாதன் சுண்ணகம், திருமதி ஏ. சிவநேசராசா வந்தாறுமூலை, யூ. எல்.எம். நிசாகிர் பொல்காவலை, திருமதி என். செல்வராசா பூநகரி, பீ. ராசலிங்கம் மட்டுவில், செல்வி கே. தேவேந்திரா பருத்தித்துறை, செல்வி எம். இராசேஸ்வரி கொழும்பு, கே. கே. பாலச்சந்திர கொழும்பு, திருமதி ரி. நவரஞ்சனு பருத்தித்துறை, கே. வீ ராஜதுரை வரணி, ரீ. நவரத்தினம் சரவெட்டி, ஏ. ஈஸ்வரநாதன் உரும்பிராய், திருமதி எல். ஆர். கிறிஸ்ரில்டா யாழ்ப்பாணம், ஏ. சதானந்தன் கோண்டாவில், செல்வி கே. பாக்கியமலர் கொடிகாமம், சீ சிவகுமாரன் சுழிபுரம், திருமதி எஸ் ஜெகநாதன் மானிப்பாய் ஏ சண்முகலிங்கம் சுன்னுகம், எஸ். நகுலராஜா சாவகச்சேரி, செல்வி யூ. சிவசுப்பிரமணியம் மட்டக்களப்பு, எஸ். கந்தசாமி பெரிய போரதீவு, என். கணேசலிங்கம் கொக்கட்டிச்சோலை, எம். சீ. கலியூர் ரகுமா அக்கரைப்பற்று, எம். கணேசன் தம்பிலுவில்.

எம். ஏ. அப்துல்ரசாக் அக்கரைப்பற்று, அமீர் அலி அக்கரைப்பற்று,எ. ஜமால்தீன் நிந்தவூர், ஏ.எல். மொகமட்தம்பி நிந்தவூர், ஆர். பாலேந்திரன் தம்பிலுவில், எஸ். வயிரவநாதன் பூநகரி, ஏ. எஸ். ஐ. சாகிபு தொடங்கஸ்லந்த. எம். பத்மநாதன் வவனியா, எஸ். எஸ். புஸ்பராசா மாங்குளம், செல்வி ஜீ. யூ. எம். இப்ராஹிம் மூதூர், ரீ. பாலகுமரன் கொழும்பு, எம். எஸ். இம்தியாஸ் கண்டி, எம் எஸ் மொஹமட் கமில். தெமட்டகம, செல்வி எஸ். எம். சிவசோதி லக்சுமிதேவி சுளிபுரம். ஏ. எம். சதக்கத்துல்லாக் வேப்பங்குளம், எம். எஸ் ஜவாகீர் எருக்கலம்பிட்டி, செல்வி பீ. சரோஜினிதேவி அரியாலை, எஸ். தேவதாஸ் ஏழாலை, என் ராஜகுமாரன் மானிப்பாய், டீ.ஜெயராமன் சந்தர்மடம், வீ. சுப்பிரமணியம் கரவெட்டி, ஜீ. தேவஞானம் சித்தங்கேணி, செல்வி என். கலானந்தராஜா நல்லூர், செல்வி ஜீ. வைத்தியலிங்கம் கரவெட்டி, சீ. ஏ. ரகுநாதன் அரியாலை, எஸ் கே. ஸ்ரீரங்கநாதன் கரவெட்டி, கே. தம்புதொண்டமானுறு. கே. கலைச்செல்வன் ஊர்காவற்றுறை, எம். ராசநயசம் யாழ்ப்பாணம், எஸ் நந்தகுமார் பருத்தித்துறை, செல்வி கே. விக்கினேஸ்வரி களுவாஞ்சிக்குடி, கே. விஜயராசா, களுவாஞ்சிக்குடி, வீ.கோபாலபிள்ளை [illegible]ருக்கள்மடம், ஏ. ஏ மஜட் ஏறுவூர், செல்வி எஸ். பீ. கதரீன் வடலட் மட்டக்களப்பு, செல்வி கே. தியாகராசா மட்டக்களப்பு எர். தயாசீலன் கொக்கட்டிச்சோலை, செல்வி யூ. எல். எவ். உம்மா காத்தான்குடி, எஸ். யோகராசா, மட்டக்களப்பு, கே. செல்வராசா அக்கரைப்பற்று, எம். கே. எம். யுபைகிர் அட்டாளைச்சேனை, எஸ். எம். கலீல் நிந்தவூர். ஆர். வரதராசன் கல்முனை, எஸ். பீதாம்பரம் தம்பிலுவில், எஸ். வெள்ளைத்தம்பி சம்மாந்துறை, செல்வி ஏ. கே. உம்மா சம்மாந்துறை, எம். எல். எம். மொஹிடீன் சம்மாந்துறை, செல்வி எஸ். பொற்செல்வி கல்முனை, செல்வி ஏ. எஸ். மும்தாஜ் நிந்தவூர், ஏ. வேதநாயகம் கல்முனை, எம் எம். ஏ. வஹாப் சாய்ந்தமருது, எம். எஸ். ஏ ஜலீல் கல்முனை, கே. பீ. சிவானந்தராஜ் நெடுங்கேணி, எஸ். தாமோதரம் திருகோணமலை, செல்வி எல். கே. நாகராசா கொழும்பு, எஸ். கிறிஸ்தோபர் கண்டி, எஸ். தேவேந்திரன் பசறை, வீ. கருணகரன் பண்டாரவளை, செல்வி எம். நிர்மலாதேவி மாத்தளை, செல்வி பி. யோகராணி மாத்தளை, எம், ஏ. ரம்சீன் எருக்கலம்பிட்டி, ரீ. யோகராசா மானிப்பாய், ஏ. விஜயநாதன் சங்கானை, எம். மகேந்திரன் அனலைதீவு, எஸ். திருநாவுக்கரசு அல்லைப்பிட்டி, செல்வி பீ. மகேஸ்வரி அல்வாய், திருமதி பீ. சந்திராதேவி யாழ்ப்பாணம், ஏ. கிருஷ்ணதாசன் மானிப்பாய், பீ. தில்லைநாதன் யாழ்ப்பாணம், கே. குலசேகரம் களுவாஞ்சிக்குடி. செல்வி கே. ரஞ்சிதமலர் கல்லடி, ஏ. எம். யவானில் மன்னார், ஏ. எஸ். லாகீர் சிலாபத்துறை, செல்வி எஸ். விமலானந்தராசா மாத்தளை, எம். சற். ஏ. கரீம் அக்கும்புர.

# இசை, நடன ஆசிரியர்கள்

பின்வருவோர் இசை, நடன ஆசிரியர்களாக நியமனம் பெறுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சேவை முன் ஆசிரியப் பயிற்சி இம்மாதம் 29ம் திகதி தொடக்கம் அளுத்சம ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும். இதற்கான கடிதங்கள் ஒவ்வொருவரது முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உரிய காலத்திற் கடிதங்கள் வந்து சேராவிடத்து கல்விச்சேவை ஆணைக்குழுவிற்கு வந்து கடிதத்தின் இன்னொரு படிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இதனை கல்விச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் கலாநிதி ஆ. கந்தையா தெரிவித்துள்ளார்.

## இசை ஆசிரியர்கள்

செல்விகள்: ஈ. யசோதா (சுளிபுரம்) எல். விநோதனி வண்ணார்பண்ணை, எம். சுபாஜினி கொக்குவில், வி.விமலாதேவி உடுப்பிட்டி, வி. ஜயந்தி சுளிபுரம், கே.நாகராசய்யா தெல்லிப்பழை, கே.புஷ்ட வதி நல்லூர், வி. இராஜேஸ்வரி சாவகச்சேரி, எஸ். பொன்னையா அளவெட்டி, சாந்தலக்சுமி அளவெட்டி, எஸ். ஏ. சோதிநாதன் மானிப்பாய், எஸ். மதிவதனி திருக்கோணமலை, ஆ. ஜெயவரதணி திருகோணமலை, எஸ். சுபாஜினி சாவகச்சேரி, எஸ். சிவமலர் கொடிகாமம், ஏ.வலிதாம்பிகை கோண்டாவில், எஸ். நகுலாம்பிகை அம்மா கோண்டாவில், கே. சந்திரகுமாரி களுவாஞ்சிக்குடி, கே. தேவமஞ்சரி காரைநகர், எஸ். பிரியதரிசினி கோண்டாவில், என். யாசோதா தெல்லிப்பழை, சுமதி துரைசிங்கம் கோப்பாய், கனகாம்பிகை சாவகச்சேரி, என். இாத்நேஸ்வரி சுளிபுரம், எஸ்.நித்தியானந்தன் அளவெட்டி, கே. குவாரசுந்தரம் மாவிட்டபுரம், கே. மல்விகா திருநெல்வேலி, பி. சத்தியரூபதி பண்டைத்தருப்பு, ஆர். சாந்தி பவாராணி காங்கேசன்துறை, கே. தனலக்சுமி திருநெல்வேலி என்.செல்லத்துரை யழ்ப்பாணம், எஸ் நித்தியகல்யாணி, என்.சரோஜினி திருநெல்வேலி, ரி. ஜயந்தினி அளவெட்டி, ஜே. எஸ் ரூபிஜோய் யாழ்ப்பாணம், ஏ. ராமா கொடிகாமம், வி. திருமகள் கோண்டாவில், என். ஜயதேவி யாழ்ப்பாணம், ரி.வாசுகி கொழும்பு, வி. கணேசலிங்கம் அளவெட்டி, வை. பொன்னம்பலம் தெல்லிப்பழை, எஸ். தயாநிதி மட்டக்களப்பு, எஸ். ஸ்ரீகாந்தி சாவகச்சேரி, ஏ. அமர்தகலா சுன்னாகம்: கே. கமலராணி தெல்லிப்பளை, திருமதி உஸ். ஞானமஞ்சுளா சாவகச்சேரி, திரு.கே.பரமேஸ்வரம் வரணி,

## நடன ஆசிரியர்கள்

திரு. பி, குமாரசூரியம் திருகோணமலை, செல்விகள் ஆர். வாசுகி அளவெட்டி, ஆ. ரேணுகாதேவி திருகோணமலை, ஏ. தயாநிதி சாவகச்சேரி, எம் பரமலிங்கம் பருத்தித்துறை, திருமதி ஏ. ஈ. குணசீலன் யாழ்ப்பாணம், திருமதி. எஸ். ஜி.பிரபாகரன் யாழ்ப்பாணம்.


## மலிவு விற்பனை

தரமான உடுபிடவைகளையும் Ford Suitcase வகைகளையும் தேர்ந்தெடுத்து வரும் பண்டிகைக்காலத்தை சிறப்பாக ஒருபடி முன்னேற்றத்துடன் கொண்டாடுங்கள். **மலிவு விலையில்** உடுபிடவைகளைப்பெற:

**லேடன் இன்டஸ்ரியஸ் லிமிட்டெட்**

தயாரிப்புகளைப்பெற இன்றே விரையுங்கள்:
ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை நடைபெறும்.

**லேடன் காமன்ஸ்,**

**86, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(2485) தொலைபேசி: 22330


## அறிவித்தல்

அரசாங்க ஓய்வூதியர் நலன்கருதி 27-11-85 இல் நிகழ்ந்த நிகரத்தில் அந்தியகால நிதியுதவி முறையை அங்கத்தவர்கள் ஏகமனதாக அனுமதித்துள்ளனர்.

ஒவ்வொரு அங்கத்தவரும் முற்பணமாக ரூபா 300/- கட்டி, பின் 20 மாதங்களுக்கு ரூபா 25/ வீதம் பங்குப்பணத்தை ஒவ்வொருமாதமும் 25-ம் திகதி அல்லது அதற்கு முன்னும் கட்டலாம். குறித்த தொகை ரூபா 800/- நிதிக்குக் கட்டியவுடன் வைப்புப் புத்தகம் கொடுக்கப்படும். இக்கால எல்லைக்குள் மரித்தால் கட்டியபணம் உடன் கொடுக்கப்படும்.

1-9-87 தொடக்சம் அந்தியகால நிதி செயல் முறைப்படுத்தப்படும். மரிப்பவர் ஒருவருக்கு ரூபா 3,500/- வழங்கப்படும்.

கீழ்க்காணும் ஓய்வூதியர் அந்தியகால நிதி உதவி நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

[1] ஸ்ரீமான் த. இராசதுரை,
[2] ஸ்ரீமான் சி. நாகலிங்கம்,
[3] ஸ்ரீமான் க தம்பியப்பா.

சேரவிரும்பும் ஓய்வூதியர் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

1-1-1986 இலிருந்து அந்தியகால நிதி உதவி நடைமுறைப்படும்.

**க. தம்பியப்பா** — பொருளாளர்
**சி. நாகலிங்கம்** — செயலாளர்

முகவரி:

**திரு. வ. மாணிக்கம்,**
தலைவர்,
திருநெல்வேலி-கிழக்கு,
யாழ்ப்பாணம்.

கவனிக்கவும்:

''ஒய்வூதியம்'' என்னும் பத்திரிகை 1986-ம் ஆண்டு பங்குனி தொடக்கம் மலரும். [2529]

# இப்படியும் நடக்கிறது

குருநகரைச் சேர்ந்தவர் திரு. ஏ.யேசுராசா. இவருக்கு இம்மாதம் ஒன்பதாம் திகதி [முத்திரையிடப்பட்டு] கல்முனையில் வைத்து ஒரு பதிவுத்தபால் அனுப்பப்பட்டது

அந்தக்கடிதத்தில் இவரது விலாசமும், அனுப்புபவரது விலாசமும் மிகவும் தெளிவாகவும் சரியாகவும் இருந்தது. ஆனுலும் 13-ம், 14-ம் திகதிகளில் ''வீட்டில் ஆள் இல்லை. விலாசம் பிழை'' என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டு மூன்று தடவைகள் தபாலகம் திரும்பிச் சென்றுவிட்டது. இதன் பின்னர் பதினுரும் திகதி இவருக்கு அதே விலாசத்துக்கு; ஒரு கடிதம் வந்திருப்பது சம்பந்தமாக தபாலகத்திலிருந்து அறிவித்தல் கடிதம் வந்தது. விழுந்தடித்துக் கொண்டு திரு யேசுராசா தபாலகம் சென்று விசாரித்த போது அந்தப்பதிவுத்தபால் விஷயம் புரியவந்தது.

அடிக்குறிப்பு: [1] இது நடந்திருப்பது நமது ஊரில். [2] பெயர் விலாசம் சரியாக இருந்தும் திரும்பி இருக்கிறது. [3] மேற்குறிப்பிட்ட நமது 'கதாநாயகன்' ஒரு உதவித் தபால் அதிபர்!

இவருக்கே இப்படி என்ருல் சமானியமானவர்களுக்கு?

'ஊடுருவி'


## சீட்டிழுப்பு

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் கூடைப்பந்தாட்ட நிதிக்கான சீட்டிழுப்பு 24-12-85 காலை 10-00 மணிக்கு மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

நலன்விரும்பிகள் தவருமல் சமுகம்தரவும்.

அமைப்பாளர்கள்.

[2568]



## குவைத், மேற்கு ஜெர்மனி

### உடனடிப் பிரயாணம்

பாஸ்போட், 3 புகைப்படங்களுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளவும். மேலும் பாஸ்போட், பொண்ட், விசா பிரயாணக் காசோலை பிரயாணச் சீட்டுகள் ஆகியன உடனே பெற்றுத்தரப்படும்.

விபரங்களுக்கு:-

**ரஜீவன் ரவல்ஸ்**

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(B. M. C. முன்பாக)

டெலிபோன்: 23665 (2569)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

**செல்வன் பொன்னையா முரளீதரன் (வேவி)**

அன்னை மடியில்: 22-10-56

இறைவனடியில் 23-11-85

எமது நந்தா குலவிளக்காய் ஒளிபரப்பி எம்மை ஆருத்துயரில் ஆழத்திவிட்டுப் பாதிவழியில் மறைந்த எமது அன்புச் செல்வமே! உமது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிருேம்,

பொன்னையா குடும்பத்தினர்.

பன்ருலை, தெல்லிப்பழை. [2567]


## வீடியோ பிரசாத்தின்
# இன்றைய வெளியீடுகள்

ஆனந்தபாபு, ஜீவிதா நடித்த

1. ''வெற்றிக்கனி'' (THOMSUN ORIGINAL)

பாக்கியராஜ், கல்பனு நடித்த

2. ''சின்னவீடு'' (THOMSUN)

விசுவின் கார்த்திக், சுலக்சனு நடித்த

3. ''கெட்டிமேளம்'' (THOMSUN)

## வீடியோ பிரசாத்

232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


# ''தனித்துவமிக்க ஜனரஞ்சககவிஞர்!''

## ஐயாத்துரை நலம்பெற பாராட்டு

[யாழ்ப்பாணம்]

''ஈழத்துக் கவியரங்குச் சரித்திரத்தில் கவிஞர் வே. ஐயாத்துரைக்குத் தனியிடமுண்டு. கவியரங்கை இசையரங்காக மாற்றிவிடும் கலைஞர் இவர். யாழ் குடாநாடு பூராவும் 'கவியரங்குக் காலம்' என்ற ஒன்று முன்பு இருந்த போது எம்மிடையே எங்கும் காணப்படுபவர் அரியாலையூர் கவிஞர். யாழ். இலக்கிய வட்டத்தை தமிழருக்கு அறிமுகஞ் செய்து வைத்த கவிஞர் சாதாரணமான ஒரு கவிஞரல்ல அவருக்கென்று தனித்துவமுண்டு''.

இவ்வாறு அகில இலங்கை கம்பன் சழகம் அரியாலையூர்க் கவிஞர் திரு. வே. ஐயாத்துரை நற்சுகம்பெற்று வாழவேண்டி ஏற்பாடு செய்திருந்த பிரார்த்தனையின் போது பேசுகையில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் அ. சண்முகதாஸ்குறிப்பிட்டார்.

பிரார்த்தனைகள் நல்லை ஆதினம் குருமகாசந்நிதானம் சுவாமிகள் தலைமையில் அரியாலை ஸ்ரீ கலைமகள் ஆலயத்தில் நடைபெற்றது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் தொடர்ந்து பேசுகையில்:

''கவிதை, பாடவேண்டியவைதான். கவிஞர்கள்பாடுவதன் மூலமே கவியின் சிறப்பை வெளிக்கொணருகிருர்கள். இதேபோல கவிஞர் ஐயாத்துரையும் கவியரங்குகளில் இனியகுரலோசை எழுப்பித் தனதுகவிதைகளை மக்கள் மனதில் பதியும்படி செய்வதில் வல்லவர்'' என்ருர்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் தமது ஆசியுரையில்: 'கவிஞர்' என்ருல்அது திரு.வே. ஐயாத்துரை அவர்களையே குறிக்கும். இன்று அவரை ஆண்டவன் சோதித்துள்ளான். நாயன்மார்களையும் இறைவன் சோதித்தான். குருபர சுவாமிகளுக்கு இறைவன் அருள்செய்ததுபோல நம் கவிஞருக்கும் இக்கலைமகள் உதவுவாள்'' என்ருர்.

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா தமது உரையில்: கவிஞர் ஐயாத்துரை கவிஞர், நாடகநடிகர், இசைஞர் என்பதல்ல அவரின் சிறப்பு. அவர் ஒரு சிறந்த மனிதன் என்பதே பெருஞ்சிறப்பாகும்'' என்ருர்.

தெனியான் தமது உரையில்: ''இலக்கியக்காரர்களிடையே பல 'கன்னைகள்' உண்டு. ஆனுல் கவிஞர் ஐயாத்துரை அப்படி அல்ல. அவரை எந்தவகையான இலக்கிய காரரும் வரவேற்பார்கள்'' என்ருர்.

திருமதி வசந்தா வைத்தியநாதன் தமது உரையில்: ''கவிஞர் என்பவன் பிரம்மனைவிடச் சிறந்தவன். கூட்டாகக்குரல் எழுப்பினுல் அதற்குதனி வீரியம் உண்டு. இதன் சக்தி மகத்தானது. இதனுல் பலர் மறுபிறவி எடுத்துள்ளனர். நம் கலைஞரும் சுகம்பெற இப் பிரார்த்தனை உதவும்'' என் என்ருர்.

ஆசிரியர் சிவராமலிங்கம் தமது உரையில்: ''கவிஞர் பெரும் வாணி பக்தர். வாணி அருள் அவருக்கு கிடைக்கும்'' ருர்.

திரு. சோ. பத்மநாதன் கவிதாஞ்சலி செலுத்தினர் திருமதி வசந்தா வைத்தியநாதன் திருவெம்பாவை திருமுறைகளை பிரார்த்தனைப் பாடல்களாகப் பாடினுர். கம்பன் கழகச் செயலாளர் திரு. ஜெயராஜ், ஸ்ரீ கணேஸ் ஆகியோரும் பேசினுர்கள். (ஐ)

## ஆத்மீகப் போதனைகள்

(சுழிபுரம்)

சுவாமி விவேகானந்தரின் போதனைகள் கொண்ட சிறு நூல் ஒன்றை சுழிபுரம் சுவாமி விவேகானந்தா அறிவகத்தினர் அச்சிட்டு வெளியிடவுள்ளனர். அறிவகப்போஷகர் திரு. ந. சிவரஞ்சன் நூல் வெளியிடுவதற்கான ஏற்பாட்டைக்கவனித்து வருகின்ருர்.

## யாழ். உதைபந்தாட்டப் பயிற்சியாளர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

''யாழ். உதை பந்தாட்ட பயிற்சியாளர் சங்கம்'' புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இச்சங்கம் விளையாட்டுக் கழகங்கள், கல்லூரிகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றுக்கு உதைபந்தாட்டப் போட்டியின் பெறுபேறுகள், அதன் புதிய-பழைய சட்டதிட்டங்கள் பற்றி விரிவுரைகளும். பயிற்சியும் அளிக்கவிருக்கிறது.

குறிப்பாக பொதுமக்களுக்கு உதைபந்தாட்டத்தின் விதிமுறைகளை விளக்கிக்கூறி, உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறும்போது ரசிகர்கள் மைதானத்துக்கு வெளியில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதையும் விரிவாக எடுத்துக் கூற இருக்கிறது.

இப்புதிய கங்கத்தின் முதலாவது அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 5ம்திகதி யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலகத்தில் கூடவிருக்கிறது.

உதைபந்தாட்டப் போட்டியில் ஆர்வம் உள்ளவர்களும், உதைபந்தாட்டப் போட்டியில் திறமைமிக்க பயிற்சியாளர்களும் இப்புதிய சங்கத்தில் சேர்ந்து கொள்ளலாமென, மேற்படி சங்கத்தின் அமைப்பாளர் திரு எஸ் எம். மாட்டீன் தெரிவித்தார். [வி


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### புதியகல்வியாண்டு (1985 / 86) விரிவுரைகளின் ஆரம்பம்

புதிய கல்வி ஆண்டு (1985/86) விரிவுரைகள் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகும்.

2 - 1 - 1986 — கலைப்பீடம்

6 - 1 - 1986 — விஞ்ஞான, மருத்துவ பீடங்கள்.

பதிவாளர்

2502


## அனுதரவாகக் கிடந்த சைக்கிள்

(வண்ணர்பண்ணை)

கொழும்புத்துறையில் பிரதான வீதிக்கு அண்மையில் அனுதரவாகக்கிடந்த சைகிள்ல் ஒன்று கொழும்புத்துறை 'எழிலொளி' சன சமூக நிலைய இளைஞர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 20ம் திகதி காலை கண்டெடுக்கப்பட்ட இந்த சிங்கர் சைக்கிள் மேற்படி சன சமூக நிலைய நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நிலையப் பாதுகாப்பில் உள்ளதாக நிலைய உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆருத்திரா அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பழைய வீதி அருள்மிகு வீரபத்திரர் கோவிலில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை ஆருத்திரா அபிஷேகமும் தரிசனக்காட்சியும் திருவீதி வலமும் இடம் பெறவுள்ளன.

## நத்தாரில். .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

## சமாதானப் புரு?

''எல்லா உயிரும் இறைவன் குடும்பம், சீவகாருண்யமே சிறந்தஒழுக்கம்'' என்ற கோட்பாடுகளை வருடாவருடம் நினைவூட்டும் கிறிஸ்மஸ் தினத்தில் நாடும் நாமும்; சமாதானப்புருவைக் கண்டு களிக்க பேரவாவுடையோம்.

எங்கள் நாட்டில், எங்கள் இளைஞர்களை எவ்வாறு பாதுகாப்போம், நாட்டில் அமைதிக்கு எவ்வாறு உழைப்போம், தென்ஆபிரிக்கா தொடக்கம், மத்தியகிழக்கு, மத்திய, லத்தீன் அமெரிக்க நாடுகள் வரைக்கும் பலநாடுகள் வறுமையில் அடிமைகளாக, சமாதான, ஜனநாயக ஆட்சியின் மணம் குணம் தெரியாது, வல்லரசுப் போட்டிகளலால் ஏற்படும் அராஜகத்திற்குப் பலியாகின்றன.

எங்கள் தமிழ் இளைஞரின் உயிர்த்தியாகம் பண்டைய வடக்கிருத்தலை நினைவூட்டுகிறது. கோழைகளுக்கு சமாதானம் முயற்கொம்பென அறிக.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி இலைசா இராசம்மா அருமைரத்னம்**

மலர்வு: 14-12-1898

உதிர்வு: 23-12-1984

ஓராண்டு காலமாய் எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி ஆண்டவர் இயேசுபிரானின் இனிய சமூகத்தில் இன்பமாய் இணைந்து வாழும் எங்கள் மம்மி ஓயாமல் உமக்காக நன்றியுடன் மன்ருடுகிருேம்.

''ஆண்டவர் இயேசுவோடு இணைக்கப்பட்டவர்களாய் மரணமடைகிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்''

— திருவெளிப்பாடு; 14:13

அன்னுரின் நல்வாழ்வை நினைந்து நன்றி செலுத்தும் நினைவு ஆராதனை வறுத்தலைவிழானில் 23-12-85 பிற்பகல் 3-30 மணிக்கு நடைறெும்.

உங்களுக்காக இறைவனை மன்ருடும் உங்கள் அன்பு

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

வறுத்தலைவிழான், தெல்லிப்பளை. [2526]

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## வசாவிளான்,கட்டுவன்,மயிலிட்டி பகுதிகளில்
# துப்பாக்கிச்சூடு! சிறுவன் பலி! வீடுகள் சேதம்!

(மாவிட்டபுரம்)

எதிர்பாராத விதமாக ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதால் பலாலி விமான நிலையத்தைச் சூழவுள்ளபகுதியில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தினுல் சிறுவன் ஒருவன் பலியாஞன். பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை 8-30 மணியளவில் நடந்தது. இதுபற்றி தெரியவருவதாவது:

சனிக்கிழமை காலை 8-30 மணியளவில் வசாவிளான் கட்டுவன், மயிலிட்டி பகுதிகளில் திடீரென ஹெலிகொப்டர்தாழப்பறந்தது. அச்சமயத்தில் ஆகாயத்திலிருந்தும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அப்பொழுது அப்பகுதி ஆலயங்களில் திருவெம்பாவை பூஜைகள் நடந்து கொண்டிருந்தன. எதிர்பாராது ஏற்பட்ட இந்த துப்பாக்கிப்பிரயோகத்தால் ஆலயங்களில் வணக்கத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் சிதறி ஓடினர். வீடுகளில் இருந்தவர்கள் பாதுகாப்புத் தேடிஓடினர்.

பலர் பற்றைகள், புதர்களுக்குள் பதுங்கக் கொண்டனர்.

வசாவிளான் மடத்தடியைச் சேர்ந்த ம. சடேசன் என்னும் பத்து வயதுச் சிறுவன் துப்பாக்கிப் பிரயோகத்தால் படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்குகொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமாஞர். மேலும்பலர் காயமடைந்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் பல வீடுகளும் மேற்படி துப்பாக்கிப்பிரயோகத்தால் சேதமடைந்தன. இதனுல் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பஸ் சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்தன. விமான நிலைய சுற்றுடல் பகுதியில் வசித்த மக்கள் பாதுகாப்புக்காக வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்,

## இரண்டு மாதமாகிவிட்டது
# மினிபஸ் வாங்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை!

(மாவிட்டபுரம்)

கீரிமலையைச் சேர்ந்த சுப்பு விஜயகுமார் என்பவர் பெறுமதியான பணத்துடன் மினிபஸ் கொள்முதல் செய்வதற்குக் கடந்த அக்டோபர்மாதம் 16-ம் திகதி சென்ருர். ஆனுல் இவர் இன்னமும் வீடு திரும்பவில்லை. பல இடங்களில் தொடர்பு கொண்டும் பலன் கிடைக்கவில்லை.

இது குறித்து ஆராய்ந்து உண்மை நிலையைத் தெரியப்படுத்துமாறு கீரிமலை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. க. சுந்தரமூர்த்தி போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், யாழ். பிரஜைகள் குழுவுக்கும், யாழ். அரசாங்க அதிபருக்கும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கீரிமலை வலித்தூண்டல் சம்பவம்
# கண்காணிப்புக் குழுவுக்கு பிரஜைகள் குழு மகஜர்

[மாவிட்டபுரம்]

''அண்மையில் கீரிமலை வலித்தூண்டல் பகுதியில் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும். அத்துடன் இப்பகுதி மக்களின் அமைதியைக் குலைக்கும் இப்படியான சம்பவங்கள் இனிமேல் இடம்பெருமல் இருக்க வேண்டும்''

இவ்வாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு, கீரிமலை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. க சுந்தரமூர்த்தி மசஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கீரிமலை வலித்தூண்டல் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து நேரில்சென்று பார்வையிட்ட பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இந்த மகஜரை அவர் அனுப்பிவைத்தார். அந்தமகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''கீரிமலை சைவ சமயத்தவர்களின் புனித ஸ்தலம் அண்மையில் அங்குநடந்த சம்பவங்களினுல் மக்கள் அப்பகுதியில் சென்று தங்கள்புனிதத் தொண்டுகளை மேற்கொள்ள அஞ்சுகிருர்கள்',

''வலித்தூண்டல் பகுதியில் ஏழை மீனவர்கள் பாதுகாப்புப் படையினர் அத்துமீறல்களால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிஞர்கள்''

அண்மையில் வலித்தூண்டலில் கபரியல் வெவிச்சோர் என்பவரின்வீடு பாதுகாப்புப் படையினரால் முற்ருக எரிக்கப்பட்டது; வீட்டுப் பொருட்கள் பணம் ரூபா 4,500 உட்பட சகல பொருட்களும் எரிந்து சாம்பராயின. மற்ற ஒருவரின் வீடும் உடைக்கப்பட்டு 4,700 ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இனியும் இப்படியான சம்பவங்கள் இடம்பெருமல் இருக்க வகைசெய்ய வேண்டும்.

# தனியார் தொலைக்காட்சி ஒளிபரப்புநிலையம் முற்றுகை

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவுப் பகுதியில்ஆயுதப் படையினர்நடத்திய தேடுதலின்போது தனிப்பட்டவர்களினுல் நடத்தப்பட்ட தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவை நிலையமொன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

தொலைக்காட்சி உபகரணங்களைக் கைப்பற்றிய ஆயுதப் படையினர் அங்கிருந்தவர்களையும் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினர்.

இதேநேரத்தில் முகாம் ஒன்றும் ஆயுதப்படையினரின் முற்றுகைக்கு இலக்கானதாக அறிவிக்கப்பட்டது.

# திருத்தவேலைகள் குறித்து இளைஞர்கள்மீது விசாரணை

(முல்லைத்தீவு)

கடந்தசனிக்கிழமைமுல்லைத்தீவில் இராணுவத்தினரால் பலர்கைதுசெய்யப்பட்டு இராணுவமுகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர் வாஞெலி திருத்துபவர் ஒருவரும், வீடியோ ஸ்தாபன ஊழியர் ஒருவரும் மற்றும் சந்தைக்குள் வியாபார செய்யும் இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இயக்க சம்பந்தமான கமெராக்கள், வாக்கிடோக்கிபழுது பார்த்தல் சம்பந்தமாக அவர்களை விசாரணைக்கு உட்படுத்தியதாக விடுதலை செய்யப்பட்ட சில இளைஞர்கள் தெரிவித்தார்கள்.

# நாயிடமிருந்து முண்டம் மீட்கப்பட்டது

[கிளிநொச்சி]

ஒருநாள் சிசுவின் முண்டம் ஒன்றை நாயிடமிருந்து பொது மக்கள் மீட்ட சம்பவம் கிளிநொச்சி நகரில் இடம்பெற்றுள்ளது.

முண்டமான சிசுவை பொது மக்கள் கிளிநொச்சி கிராம சேவகர் எஸ். தனபாலசிங்கத்திடம் ஒப்படைத்ததைத் தொடர்ந்து இவ்விஷயம் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

அரசினர் ஆஸ்பத்திரியிலோ அல்லது தனியார் ஆஸ்பத்திரியிலோ சிசு மரணமான சம்பவம் இடம்பெறவில்லையென்று கிராமசேவகர் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்தது.

பதில் நீதவான் வி. எஸ். சுந்தரலிங்கத்தின் பணிப்பின்பேரில் மீட்கப்பட்ட முண்டம் வைத்திய நிபுணரின் டரிசோதனைக்காக அம்புலன்ஸ் வண்டிமூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## கடற்படை துப்பாக்கிச் சூடு
# இலங்கை மறுப்பு

[சென்னை]

இராமநாதபுரத்திற்கு அருகே இலங்கை கடற்படையினர் துடபாககப் பிரயோகம் செய்ததில் இந்திய மீனவரான சிவலிங்கம் என்பவர் படுகாயமடைந்துள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் அனைவரும் கரைக்குத் திரும்பிவிட்டனர். இச்சம்பவம் தொடர்பாக இந்தியப் பொலிஸார் வழக்கொன்றையும் உடனடியாகப் டதிவு செய்துள்ளனர்.

### இலங்கை மறுப்பு

இதே நேரத்தில் மேற்படிச் சம்பவத்தில் இலங்கை கடற்படையினர் சம்பந்தப்படவில்லை என்று கடற்படைத் தளபதி அறிவித்துள்ளார்.

# பரிசளிப்புவிழா

[உடுவில்]

உடுவில் தெற்கு சத்தியபுரம் சிற்ருலய ஓய்வுநாள் பிள்ளைகளின் பரிசளிப்புவிழா இம்மாதம் 26-ம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்விழா திருமதி ஏ. ஆர். தம்பியப்பா அவர்களின் ஆராதனையுடன் ஆரம்பமாகும்.

# பிரதிஷ்டை விழா

[கிளிநொச்சி]

கிளிநொச்சி ஜெப ஆலய புதிய கட்டிட பிரதிஷ்டை விழா 24-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இ. போ. ச. டிப்போ அருகில் அமைந்துள்ள இக்கட்டிடத் திறப்பு விழா வண. பிதா எஸ். சந்தனம்பிள்ளை தலைமையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்
## கதிரவேலு முருகேசு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. கதிரவேலு முருகேசு நேற்று முன்தினம் சிவபதமெய்திஞர். அன்னர் பொற்கொடி அம்மாவின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற திருமதி செல்லம்மா பொன்னையா, டானியல் சின்னத்தம்பி, சுப்பையா ஆகியோரின் சகோதரனும், கந்தசாமி, திருமதி இரத்தினம் ஆகியோரின் அருமை மைத்துனரும், நமசிவாயம்பிள்ளை (மாலைதீவு), சற்குணனந்தம் (யாழ். மா. ப. நோ. கூ. ச.), அருளானந்தம்(ஈழநாடு), விவேகானந்தம் (யாழ். அஞ்சலகம்), இராஜராஜேஸ்வரி (நீதிமன்றம், மன்னூர்), சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தகப்பஞரும், நாகபத்மினி, பத்மலோசனி, வசந்தலோசனி, அனுஷா, அசோகன் (உரிமையாளர், நியூ அசோகன்ஸ் யாழ்ப்பாணம்),ஆகியோரின் அன்புமாமஞரும், நகுலாம்பிகை, அரியரத்தினம் (கொழும்பு ஸ்ரூடியோ) ஆகியோரின், சிறிய தகப்பஞரும், நடராசா, ஆனு, சாவன்னு, (கொழும்பு), பூலோகராணி, ஆகியோரின் மாமஞருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் (23-12-85) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை, உற்ருர் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 2, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (2561)

# தென்பகுதிக்கு இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் நான்கு பொலிஸ் ஜீப் சாரதிகள் தென்பகுதிக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் அண்மையில்தான் தென்பகுதியிலிருந்து இடமாற்றம்பெற்று இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது. [க]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.

# மரண அறிவித்தல்
## திரு. அருணுசலம் கோபாலசாமி
### (இராசா)

[யாழ். பெரியகடை. மார்க்கெட் ஐக்கிய சங்கத் தலைவர்]

யாழ்ப்பாணம், 81/A, சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த திரு. அ. கோபாலசாமி அவர்கள் 22-12-85 ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்திஞர். அன்னுர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், மோகனும்பாள், தனகாம்பிகை, சனகாம்பிகை, பாலாம்பிகை (யாழ்/பல்கலைக்கழகம், வர்த்தகம் 3-ம் வருடம்) ஆகியோரின் அன்புத் தகப்பனுரும், செல்வச்சாமி (காங்கேசன்துறை சிமெந்துஆலை Suprientendent), வீமராசா (புத்தளம் கச்சேரி) ஆகியோரின் மாமனுரும், சின்னராசா (சீனி) தேசிக்காய் வியாபாரியின் மைத்துனருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 23-12-85 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மாலை 4-30 மணியளவில் நடைபெற்று விள் லூன்றி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[2571]